Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 07 சனிக்கிழமை (23.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 270

## உள்ளூராட்சி சபைகளில்

# வடக்கின் முதலாவது தேர்தல் யாழ்ப்பாண மாநகர சபைக்கே!

## ஏற்பாடுகள் குறித்து அறிக்கை தயாரிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஓகஸ்ட்23

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை நடத்தும் அரசாங்கத்தின் பிந்திய முடிவின் பிரகாரம்-

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கே முதலில் தேர்தல் நடைபெறவுள்ளது.

அனேகமாக, செப்ரெம்பர் இறுதியில் அல்லது ஒக்ரோபர் முற்பகுதியில் மாநகரசபைத் தேர்தல் நடைபெறும் என்று அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் 'உதயனுக்'குத் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாநகர சபைக்குத் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பான அறிக்கைகளை உரிய தரப்புகளிடம் இருந்து அரசாங்கம் கோரியுள்ளதாகவும் அறியவந்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈரான் அமைச்சர் இன்று கொழும்புக்கு விஜயம்

ஈரானின் பெற்றோலிய வள பிரதியமைச்சரும், ஈரானிய தேசிய எண்ணைச் சுத்திகரிப்பு மற்றும் விநியோக ஸ்தாபனத்தின் தலைவருமான மொஹமட் றிஷா நெமட்ஷாட் இன்று கொழும்புக்கு விஜயம் மேற்கொள்கிறார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய விஸ்தரிப்புத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் குறித்து இறுதி முடிவெடுக்கும் முகமாகவே அவர் இங்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காய் உயிலங்குளம் பகுதிகளும் தனது வசம் என்கின்றது படைத்தரப்பு

கொழும்பு, ஓக.23

வன்னியில் விடுதலைப் புலிகளுடன் மோதலில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் வெள்ளிக்கிழமை அதிகாலை துணுக்காய் மற்றும் உயிலங்குளம் பகுதிகளைக் கைப்பற்றியுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் விமானக் குண்டுவீச்சு ஒருவர் உயிரிழப்பு; இருவர் காயம்

கிளிநொச்சி, ஓக.23

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் நேற்றுகாலை விமானப்படையினரின் ஜெற் மற்றும் எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் நடத்திய தாக்குதலில் அப்பாவிப் பொதுமகன் ஒருவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் மோசடிகள், வன்முறைகள், பருமோசம்!

## 77 ஆசனங்களுக்காக 441 பேர் களத்தில்

பொலனறுவை, ஓக.23

தேர்தல் வன்முறைகள், மோசடிகள் உச் சக் கட்டத்தை அடைந்திருக்கின்ற நிலையில் வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான வாக்களிப்பு இன்று நடக் கிறது.

இரு சபைகளுக்கும் மொத்தம் 77 ஆச னங்களுக்காக 441 பேர் வேட்பாளர்களாகக் களத்தில் குதித்திருக்கின்றனர்.

பொலன்னறுவையில் 13 ஆசனங் களுக்காக அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 130 வேட்பாளர்களும், சுயேச்சை வேட் பாளர்கள் 104 பேரும் போட்டியிடுகின் றனர்.

அநுராதபுரத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 288 பேர் உட்பட 456 பேர் களத்தில் குதித்துள்ளனர்.

இரத்தினபுரியில் 567 பேரும், கேகாலையில் 441 வேட்பாளர்களும் போட்டி யிடுகின்றனர்.

வடமத்திய மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திஸநாயக்க போட்டியிடுகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் ஜானக பெரேராவைக் களத்தில் இறக்கியுள்ளது. ஜே.வி.பியின் முதலமைச்சர்வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஸந்த சமரசிங்க போட்டியிடுகின்றார்.

இதேவேளை, சப்பிரகமுவ மாகாணத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத் தையே தனது பிரதான வேட்பாளராக நிய மித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக அங்கு நடிகர் ரஞ்சன் ராமநாயக்க போட்டியிடும் அதேவேளை, ஜே.வி.பி. தனது மாணவர் அமைப்புத் தலைவர் சமீர கொஸ்வத்தவை நிறுத்தி யுள்ளது.

சப்பிரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபை தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என்று தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

மேலும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அதிகாரிகளை அனுப்பும் நடவடிக்கைகளையும் நேற்று செயலகம் ஆரம்பித்திருந்தது. (அ-சி)

## படையினருக்குத் தக்க பதிலடி கொடுப்பதற்கு தமிழ் மக்கள் ஒரே சக்தியாய் அணி திரளவேண்டும்

### புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

கிளிநொச்சி,ஓக. 23

எமது மக்களை அழித் தொழிப்பதில் அரசாங் கமும் சிங்களப் படையும் கங்கணங் கட்டி நிற்கின் றன. அவற்றுக்குத் தக்க பதிலடி கொடுக்கும் காலம் இது வாகும். படையினரின் கொடூரத்துக்கு முடிவு கட்ட வேண்டுமெனில் கடந்த காலத்தைப் போன்று எமது மக்கள் அனைவரும் ஒரே சக்தியாக அணி திரள வேண்டும்.



இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற போர் எழுச்சிக் கூட்டமொன்று கூடலில் சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவரது உரையின் சாராம்சம் வருமாறு:-

தமிழீழ விடுதலைப் போராட்டம் முப்பது ஆண்டு காலமாக வல்லரசுகளின் உதவியுடன் இயங்கும் சிறிலங்காப் படை களுடன் எதிர் நின்று போரிட்டு வந் துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வை அவர்களின் வழியிலேயே காணவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

கொழும்பு, ஓக.23

"வடக்கு, கிழக்குத் தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்படும் அதே வேளை, புலிகளின் பிரச்சினைகளுக்கு அவர்களின் பாதையிலேயே தீர்வுகாணப்பட வேண்டும்."

- இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட சமூக மேம்பாட்டுப் பிரதிநிதி அக்ஸல் வெபர் தலைமையிலான பிரதிநிதிகள் அண்மை யில் அமைச்சரை சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமூகசேவைகள் அமைச்சுப் பணிமனை யில் இடம் பெற்ற இச்சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய வும் யுத்தத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இடம்பெறும் மோதல்களால் மனிதாபிமான செயற்பாடுகள் பாதிப்பு

### ஐ.நா.கவலை

கொழும்பு, ஓக.23

வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளால் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட 78 மனிதாபிமான செயற்றிட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது.

மோதல்களால் வன்னியில் இடம்பெயர்ந்துள்ள சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் மக்களுக்கு நிவாரண உதவி

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன்
பாலகுமார் (மகராசி நகைமாடம்)
அவர்களின் அன்புத் தந்தை

### பொன்னுத்துரை இராசேந்திரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

நண்பர்கள்.

## லொறி விற்பனை - 47/7959

சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள பின்வரும் இலக்கத்தைக் கொண்ட லொறி விற்பனைக்காக எம்மிடம் உள்ளது. கேள்வி கோரல் கடிதமூலம் குறிப்பிட்ட லொறியினை விற்பனை செய்ய உள்ளோம். தேவையானவர்கள் வவுனியா ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு லொறியினைப் பார்வையிடலாம். கேள்வி கோரல் கடிதங்களை 03.09.2008ந் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத்தபாலிலோ கிடைக்கக் கூடியதாக "பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "லொறி விற்பனை 47/7959 கேள்வி கோரல்" எனக் குறிப்பிடவும்.

பொதுமுகாமையாளர்.

## இரண்டாம் ஆண்டு நெஞ்சை நீங்கா நினைவு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 | 15 |
| ★ | ★ |
| 11 | 08 |
| ★ | ★ |
| 1959 | 2006 |

திதி: சப்தமி 23.08.2008

### அமரர் சாம்பசிவம் பாஸ்கரன்

(முன்னாள் உதயன் பத்திரிகை விநியோகஸ்தரும், சாரதியும்)

எமது இனிய தெய்வமாய் நெஞ்சிருக்கும் வரை
உயிரோவியமாய் உங்கள் நினைவிருக்கும்
உங்கள் பிரிவால் என்றும் தவிக்கின்றோம்
உங்கள் நினைவில் என்றும் வாழ்கிறோம்

கே.கே.எஸ் வீதி,
மதவடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

என்றும் பாசமுடன்:
குடும்பத்தினர்.

## மனித உரிமைகள் கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஒக. 23

மகளிர் அபிவிருத்தி நிலையம் 'மனித உரிமைகள் தொடர்பான உள்ளூர் சர்வதேச அணுகு முறைகள்' என்ற கருத்தில் ஓர் கருத்தரங்கை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் பிள்ளையார் இன் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கில் உள்ளூர் அரசசார்பற்ற மட்டத்தில் பிரதான பொறுப்புகளை வகிக் கும் பெண்கள் அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர்.

பிரதான வளவியலாளர்களாக கொழும்பில் இருந்து சட்ட சமூக அற நிலையத்தின் இணைப்பாளர் றுக்கி பெர்ணாண்டோவும் அதே நிலையத்தில் சிரேஷ்ட ஆய்வாளராக கடமையாற்றும் துலானி குலசிங்கவும், சட்டத்தரணி மு. றெமீடியஸ்சும் கலந்து கொள்ளவுள்ளனர். நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கை அரசசார்பற்ற இணையத்தின் இணைப்பாளர் சீ.வி.கே. சிவஞானம் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (1)

## கார் விற்பனைக்கு

13 SRI தொடரிலக்கமுடைய MITSUBISI LANCER CAR விற்பனைக்குண்டு.
தொடர்பு:- A.S கணேசவேல், குளப்பிட்டி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.

## தவறிவிட்டது

412, K.K.S. வீதியைச் சேர்ந்த ஜெயரட்ணம் ஆதீசன் என்பவரது (Np.Gy.xxxx) மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் 21.08.2008 அன்று (ஒரே கவரின் உள்) பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கும் வில்லூன்றிப்பிள்ளையார் கோயிலுக்கும் (கொட்டடி, நாவாந்துறை) இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கிஸ்ணா வெற்றிலைக்கடை (யாழ். சிவன் கோயில் முன்பாக உள்ளது) இங்கு ஒப்படைத்துதவவும் சன் மானம் வழங்கப்படும். தொடர்பு:- T.P. 021 222 6746

## ஆரம்ப ஆசிரியர் பதவி

ஆரம்பக்கல்வி பயிற்சிபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வழிகாட்டும் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் உரிய சான்றிதழ்களுடன் காலை 8 - 10 வரை நேரில் சமூகம் தரவும்.

அதிபர்.

## வீடு வளவு விற்பனைக்கு

உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு மிக அருகாமையில் 1 1/2 பரப்பு காணி மற்றும் வீடு (சகல வசதிகளுடன் கூடிய) என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- சி. இலங்கநாதன்,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.
தொ.பே. 0779235798 - (மாலை- 5.00 மணி தொடக்கம் காலை 7.30 மணிவரை)






## அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான மஹோற்சவ விஷேஷ விழாக்கள்



தேர்:-நாளை (24.08.2008) மு.ப.10.00 மணி- வசந்த மண் டப பூசை,மு.ப.11.00 மணி தேரில் சுவாமி எழுந்தருளல்,
உறியடி - மாலை 6.30 மணி
தீர்த்தம்:- 25.08.2008ஸ்ரீரங்கநாதர் பாத பூசை - மு.ப. 9.00 மணி தீர்த்தமாடல் - மு.ப. 11.00மணி
திருக்கல்யாணம்:- 26.08.2008 பி.ப. 3.00மணி

பொ.ப.சபை

## துயர் பகிர்கிறோம்

முன்னாள் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் அவர்களின் அன்புத் தாயாரும் யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர் திரு. க. செல்வக்குமரன் அவர்களின் அன்பு மாமியுமான

### அமரர் சேதுநாயகி அப்புத்துரை

அவர்களின் மறைவு குறித்து இரங்கல் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திப்போமாக.

உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளரும், அதிபர்களும், ஆசிரியர்களும்.

## மரண அறிவித்தல்கள்



### நாகன் வேலன் (சின்னப்பு)

மண்டானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் வேலன் நேற்று முன்தினம் (21.08.2008) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்டான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
மகன் (உரிமையாளர் கல்பனா ஸ்ரோர்ஸ் அன் பேக்கரி)

### நாகமணி கந்தசாமி

யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி கந்தசாமி 20.08.2008 புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மக னும், பகவதியின் அன்புக் கணவரும், கருணாகரன் (சுவிஸ்), கௌசலாதேவி (சுவிஸ்), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தநாயகி (கொழும்பு), காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும், அமரர்களான சின்னத்துரை, சின்னராசா மற்றும் பாலரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (25.08.2008) திங்கட்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 10, 2வதுஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பா.நாகேஸ்வரி (மணி - தங்கை)

## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counselors. This is a one year, week-end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand
2. A pass in Advanced Level
3. Age between 25 and 50 years
4. Interested in social Activities.

The applicants will have to buy the special application form at our office and submit them before the 6th of September. Only 25 applicants will be selected to follow this training.

**For further details please contact:**
**"AHAVOLI"**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway**
**St. Patrick's Road, Jaffna.**
**Contact No:- 021-222-2856**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 24 |
| ★ | ★ |
| 12 | 07 |
| ★ | ★ |
| 1929 | 2008 |

### திருமதி சொர்ணேஸ்வரி சண்முகராசா

அன்போடு எமை வளர்த்த தாயே
ஆலமரமாய் நாம் வளர்ந்து நிற்கையிலே
இமைப் பொழுதில் எமை விட்டுப் பிரிந்தீரே
பிள்ளைகள் தவித்திருக்க முருகனடி சேர்ந்தீரே

எங்கள் குல தெய்வம் சிவபதமடைந்த செய்தி கேட்டு சமுகம் தந்தும் தொலைபேசி மூலம் ஆறுதலும் தேறுதலும் கூறியவர்கட்கும் மரணச் சடங்கிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

400, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 9300

குடும்பத்தினர்.

### முகாமைத்துவக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக 23

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் முகாமைத்துவம்தொடர்பான செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி அதிபர் அறிவித்துள்ளார். (01)

### மீசாலை இளைஞன் ஆணைக்குழுவில் சரண்

அல்லாரைதெற்கு, மீசாலையைச் சேர்ந்த விவசாயியான 27 வயது இளைஞன் ஒருவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் நேற்று சரணடைந்துள்ளார். (1-25)

## கண்ணீர் அஞ்சலி



### பொன்னுத்துரை இராசேந்திரம்

22.08.2008 வெள்ளிக்கிழமை காலமான பொன்னுத்துரை இராசேந்திரம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

1)திரு.திருமதி தசக்கிரீபன் (நக்கீரன்) - சுபாசினி
தற்காலிக முகவரி: இல.23, வைமன் வீதி, நல்லூர்.
நிரந்தர முகவரி: வேலணை மேற்கு, வேலணை.
2)திருமதி சண்முகநாதன் மற்றும் ஞானவசந்தி குடும்பம், ஸ்ரீகுலவதனி குடும்பம், தசவரன் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைப் பெண்களுக்கு அருள்புரிய உதித்தான் கார்த்திகேயன்

முருகா முருகா என்று உள மார நினைந்து வாயார அழைத்து வழிபடுவோர் ஒருமுறை அழைத் தாலே ஆடும் பரியில் ஏறிவந்து அபயம் அளிக்கும் முருகத் தலங் கள் ஈழத்தில் பற்பல உண்டு. மாருதப் புரவீகவல்லி வழிபா டாற்றிப் பிணிமுகம் நீக்கப்பட்ட மையால் மாவிட்டபுரம் எனப் பெயர் பெற்ற மாவைக்கந்தன் ஆலயம், அதிரவரு மாணிக்க கங் கைக் கரையில் அமைந்திருக்கும் கதிர்காமக் கந்தன் திருத் தலம், மருதர் கதிர்காமருக்கு அருள் புரிந்து அற்புதம் பல புரிந்து தொண்டைமானாற்றங்கரையில் திருமுருகன் எழுந்தருளியிருக் கும் செல்வச்சந்நிதி, நல்லைநகர் உறையும் நல்லூர்க் கந்தன் திருத் தலம் என்பன பழம்பெருமை மிக்க முருக ஸ்தலங்களாகும்.

நல்லையம்பதியில் அலங் கார ரூபனாகக் கோயில் கொண்ட மாயோன் மருகனது மாண்பு சொல்லுதற்கரியது. வேண்டு வார் வேண்டுவதை ஈயும் வள் ளல் முருகனுக்கு வருடாவருடம் நடைபெறும் மஹோற்சவம் பக் தர்களைப் பரவசமடையச் செய் யும். இருபத்தைந்து நாள்களும் அழகன் முருகன் அபிஷேகம் கண்டு அலங்கார ரூபனாக வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் அற்புதம் ஆனந்த மானது.

சரவணப் பொய்கையில் ஒரு திருமேனியும் கருணைகூர் முகங் களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டுதித்த முருகப் பெரு மான் கார்த்திகை மாதர்களுக்கு அருள்புரியத் திருவுளங்கொண்டு காட்சியளித்தான். கார்த்திகை மாதர்கள் அறுவரும் பாலூட்டி சரவணப் பூந்தொட்டிலிட்டுத் தாலாட்டி வளர்த்தமையால் ''கார்த் திகேயன்'' எனும் திருநாமங் கொண்டான். அன்னை உமைய வளின் அரவணைப்பால் மீண் டும் ஆறுதிருமேனிகள் ஒன்றி ணைக்கப்பட்ட ஸ்கந்தன் ஆனான். முருகப்பெரு மானைப் பாலூட்டி வளர்த்தமையால்,

*கந்தன்தனை நீர்போற்றிய*
*கடனால் இவன் உங்கள்*
*மைந்தன்எனும் பெயராகுக*
*மகிழ்வால்எவ ரேனும்*
*நுந்தம்பக லிடை இன்னவன்*
*தோன்றாள்வழி படுவோர்*
*தந்தங்குறை முடித்தேபரந்*
*தனைநல்குவம்*



என்றான்.

''கார்த்திகை மாதர்களே! முரு கனை நீங்கள் வளர்த்தபடியால் இவன் உங்கள் மகன் என்ற பொரு ளில் கார்த்திகேயன் எனப் பெயர் பெறுவான். உங்கள் தினமாகிய கார்த்திகையில் முருகன் திருவடி களை வழிபடுவோருக்கு நாம் இக பர நலன்களை அருள்வோம் என்று சிவபெருமான் அருள்புரிந்தார்''.

இவ்விதமான மகத்துவம்மிக்க கார்த்திகை நட்சத்திரத்தில் நடை பெறும் கார்த்திகை உற்சவமா னது நல்லைக் கந்தன் ஆலயத் தில் தொன்று தொட்டு அதிவிஷே டமாக நடைபெற்று வருகின்றது.

இந்த நன்நாளில் ஆலய உள் வீதிகளில் என்றுமில்லாதவாறு தீபங்கள் ஏற்றப்பட்டு விசேட பூசைகள் இடம்பெறும். சுவாமி வெளிவீதியுலா வரும்போதும் தீப் பந்தங்கள் ஏற்றப்பட்டு அந்த ஒளியிலேயே சுவாமி வீதிவலம் இடம்பெறும்.

ஒவ்வொரு வருடமும் நல் லூர் பெருந்திருவிழாவில் கார்த்தி கைத் திருவிழாவும் விசேடமாக இடம்பெறும் ஒரு விழாவாகும்.

## நல்லூரில் இன்று கார்த்திகைத் திருவிழா

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா முதலாம் திகதி ஆரம்பம்



தெல்லிப் பழை துர்க்கா தேவி ஆல யப் பெருந் திருவிழா எதிர் வரும் முதலாம் திகதி முற்ப கல் 11 மணிக் குக் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது.

காலைப் பூசைகள் 7 மணிக் குப் பூசை, 8 மணிக்கு ஸ்நபன அபி ஷேகம், 9 மணிக்கு விசேட பூசை, 9.30 மணிக்கு ஸ்தம்ப பூசை, 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று சுவாமி வீதி யுலா வருவார்.

மாலைப்பூசைகள் 3 மணிக்கு சாயிரட்டைப் பூசையுடன் ஆரம்ப மாகி 3.30 மணிக்கு ஸ்தம்ப பூசை, 4.30 மணிக்கு வசந்த மண்ட பப் பூசை என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.

எதிர்வரும் 9ஆம் திகதி பிற்ப கல் ஒரு மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 10ஆம் திகதி பிற் பகல் 2 மணிக்குச் சப்பரத் திரு விழாவும், 11ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 12ஆம் திகதி ஆவணி ஓணத் தன்று காலை 8 மணிக்குத் தீர்த் தத் திருவிழாவும் இடம்பெறும்.

ஆலயத்திற்கு வருகை தரும் பெண்களும் குழந்தைகளும் நகை கள் அணிந்து வருவதைத் தவிர்த் துக்கொள்ள வேண்டும் என்றும் இரவு நேரங்களில் ஆலயச் சூழலில் தங்குவது தவிர்க்கப்படவேண் டும் எனவும் ஆலய நிர்வாகத்தி னர் தெரிவித்துள்ளனர். (203)

# நல்லை ஆதீனத்தில் இன்று பீடாரோகண விழா



கதாப்பிர சங்கம்செய்தே சைவம் வளர்த்த ஸ்ரீ லஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால் 1966ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப் பட்ட நல்லை திரு ஞானசம்பந் தர் ஆதீனம் இப்போது வெகுசிறப் பான முறையில் வளர்ச்சியடைந் துள்ளது.

சைவசமயத்தின் அருமை பெரு மைகளை அருமையாக எடுத்தி யம்பி அரிய சேவையாற்றிய சுவாமி கள் ஈழநாட்டில் மட்டுமன்றி இந் தியா, மலேசியா, சிங்கப்பூர் முத லிய இடங்களுக்கும் சென்று சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபட்டார்.

நல்லைக்கந்தன் ஆலயத்தில் கார்த்திகைத் திருவிழா நடை பெறும் அதே தினத்தில் ஆலயத் தின் மேற்கு வீதியில் அமைந் திருக்கும் திருஞானசம்பந்தர் ஆதீ னத்தில் பீடாரோ கண விழாவும் நடைபெறுவது பக்தர்களுக்கு மகிழ்ச்சி பயப்பதாகும்.

*சைவப்புலவர்* இ.ஸ்ரீதரன்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக. 23

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப் பழை துர்க்காதேவி ஆலய ஆதர வுடன் துர்க்கா தேவி மணிமண்ட பத்தில் நடத்திவரும் தெய்வீக இசை யரங்கில் இன்று எஸ்.குமார சாமி யின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

வயலின் ஏ.ஜெயராமன், மிரு தங்கம் எஸ்.துரைராஜா முகர்சிங் கே.நந்தகுமார், தபேலா சதாவேல் மாறன்.

* * *

இந்துசமய கலாசார அலுவல் கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந்திருவிழா காலங்களில் நாவலர் மண்டபத்தில் நடத்தப் பட்டு வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று சனிக்கிழமை 'தன்னம் பிக்கை' என்னும் தலைப்பில் நா. நவராஜ் சொற்பொழிவு நிகழ்த்த வுள்ளார்.

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை, சங் கானை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர் களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது. (203)

* * *

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்துவிநாயகர் ஆலய மண்டபத் தில் பிரம்மஸ்ரீ சி.[illegible].நித்தியா னந்த சர்மா 'கந்தபுராணம்' தொடர் சொற்பொழிவை நிகழ்த்தி வரு கிறார்.

[illegible] பொழிவு இடம்பெறவுள்ளது. (203)




நல்லூர் கந்தசுவாமி கோயிலில்
இன்று பதினெட்டாம் திருவிழா
கார்த்திகைத் திருவிழா (பூச்சப்பரம்)

ஔவைக்கு பழம் கொடுத்த ஆறுமுகா! - உன்
அடியவர்களுக்கு அருள் புரி வேல் முருகா

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

PC SOLUTIONS
PC SOLLUTIONS
Computer Sales & Maintenance Centre
527/1, NAVALAR ROAD, JAFFNA.


# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்





*இளமை நிலையா தெனவறிந்து வேலன்*
*பழமை தருமடியைப் பற்றும் - எழுமையும்*
*இன்பந் தருமே யிலங்கைமா நன்னாட்டீர்*
*அன்பிற் பணிவீ ரறிந்து.*

- யோகர் சுவாமிகள்.

## கார்த்திகை நாதனாக வருகிறான்

கார்த்திகை நாதனாக எழுந்தருளி அருள்பவனே
கவின்பெறு ஊர்தியில் எழுந்தருளி அருள்பவனே
பூத்த நல் பங்கயத்திலுதித்து எழுந்தருளி அருள்பவனே
பூலோக கைலாசக் கடவுளாக எழுந்தருளி அருள்பவனே
பார்திகழ் நல்லையில் உறைந்து எழுந்தருளி அருள்பவனே
பக்தர்கள் நலன்காத்து கார்த்திகையில் அருள்பவனே
சேர்த்திடும் பாமாலை ஏற்றே எழுந்தருளி அருள்பவனே
செந்தமிழ் திருவூராம் நல்லையில் எழுந்தருளி அருள்பவனே.

- ஏ.சங்குநாதன்.

## கார்த்திகை விழாக் காணும் கந்தனுக்கோர் விண்ணப்பம்

*கார்த்திகை நாதனுக்கோர் விண்ணப்பம்*
*காரியம் யாவிலும் வெற்றிகள் வேண்டும்*
*நேர்த்திகள் ஆயிரம் வைத்தோமுனக்கு*
*நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்*
*ஆர்த்தெழும் இசையினால் அர்ச்சனையுனக்கு*
*அவலத்தை பூமியில் ஒழித்திட வேண்டும்*
*தீர்த்திடு துயரெல்லாம் திருவூரெங்கும்*
*தீர்வினை அருளி கந்தா காத்திட வேண்டும்.*

- மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன் -

## கார்த்திகை நாளில்

கார்த்திகைத் திருநாள் நல்லூர்க் கந்தன்
காட்சி தருவதற்கு - அன்புக்
கான வள்ளியுடன் குஞ்சரி சகிதம்
பவனி வருகின்றான்
நேர்த்திகள் செய்வோர் மாவிளக் கிடுவோர்
நிமலா அருளென்று - அவனை
நெஞ்ச முருக ஏத்தித் தொழுவார்
நிரையாய் வீதியெல்லாம்
சீர்த்தி விளக்கும் குடை கொடி யிடையே
செல்வன் வருகின்றான் - அன்பர்
சேவடி தொழுது காவடி ஆடி
திருமுருகா என்ன
கூர்த்த வடிவேல் சேர்த்தகை காட்டி
குமரன் வருகின்றான் - சிறந்த
குலவும் மலரின் சப்பறம் அமர்ந்தெம்
குறை தீர்க்க வருவான்.

*முதுபெரும் புலவர், கலாபூஷணம், ஆசிரியர்,*
வை.க.சிற்றம்பலம்.

## என்று நீ சொல்வாய்.....!

*கார்த்திகைமார் கண்வளர்ப்பான்*
*கருணை ஒளிர் வேல்கந்தன்*
*கொஞ்சும் தமிழ் மொழியழகன்*
*நல்பதியின் தனி முடியோன்*
*நல்லையின் உன் திருநாமம்*
*அண்டமெங்கும் ஒலிக்குதையா*

*ஊன் உறக்கம் அமைதியின்றி*
*உற்ற சுற்ற இரக்கமின்றி*
*பாடுகளின் சுமையதனால்*
*பக்தர் உள்ளம் தவிக்குதையா*
*நிஜம் எதுவோ நிழல் எதுவோ*
*இவ் உலகின் உருவெதுவோ*
*குழந்தை உன் பால்முகத்தின்*
*பார்வையதன் முடிவெதுவோ?*
*நேசமுடன் நிலையிறங்கி*
*அதர்மமதை நிறுத்தாயோ?*
*பக்தியுடன் ஓடிவரும்*
*பக்தர்மனம் நோக்காயோ?*
*என்று நீ சொல்வாய்*
*''உமக்கு இனி விடிவு''என்று.....!*

அல்லாரையூர் செ.சிபி.

## கார்த்திகை மைந்தனைப் பணியுங்கடி

*சரவணப் பொய்கையில் வந்தானடி - வேலன்*
*தமிழினை ஆய்ந்து சொன்னானடி (சரவண)*


*பிரணவப் பொருளுரை ஞானியடி - நல்லைப்*
*பெரும்பதிக் கந்த சுவாமியடி (சரவண)*

*குவலயம் போற்றும் குமரனடி - அந்தக்*
*கார்த்திகை மைந்தனைப் பணியுங்கடி*
*கவலைகள் தீர்ப்பதில் வள்ளலடி - அவன்*
*கருணை மழையினில் நனையுங்கடி (சரவண)*

-அரியாலையூர் சி.சிவதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக வீரர்களை போல்ட் மதிக்கவேண்டும் ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஆலோசனை




தடகள சாம்பியனான ஜமெக் காவைச் சேர்ந்த உசைன் போல்ட் சக வீரர்களை மதிக்க வேண்டும் என சர்வதேச ஒலிம் பிக் குழுவின் தலைவர் ஜாக்கஸ் ரோஜ்ச் கூறினார்.

போல்ட் குறித்து செய்தியா ளர்களிடம் ரோஜ்ச் வியாழக் கிழமை தெரிவித்தாவது: 1930 களில் ஜெஸ்ஸி ஒவன்ஸ் தட களத்தில் சிறப்பாக செயற்பட் டதுபோன்று போல்ட் செயற் பட்டு வருகிறார். எனினும் தனது போட்டி யாளர்களை விட மிக அதிக வித்தியாசத் தில் போல்ட் முன்னணியில் உள்ளார்.

இதுபோன்ற வித்தியாசத்தை அவர் தொடர்ந்து தக்கவைத்தால் தடகளத்தில் தன்னிகரில்லாதவராக உருவாகிவிடுவார்.

ஆனால், அவர் இன்னமும் பக்குவம் அடையவேண்டியுள்ளது. இளைஞரான அவர் தனது சகவீரர்களை மதிக்கவேண் டும். ஒலிம்பிக்கின் நோக்கத்துக்காக அவர் இதை செய்யவேண்டும்.

போட்டியில் வென்ற பிறகு அவர் சக வீரர்களுடன் கைகுலுக்கவேண்டும். தற் போது அவருக்கு 21 வயதுதான் ஆகிறது. அவர் இதைக் கற்றுக்கொள்ளவேண்டும் போட்டிக்கு முன்னால் அவர் அலட்டலாக வந்தது குறித்து எனக்கு எந்தப் பிரச்சினை யும் இல்லை. ஆனால், போட்டி முடிந்தபின் சக வீரர்களுடன் கைகுலுக்குவது தோளில் தட்டிக் கொடுப்பது போன்றவை நல் லெண்ணச் செயல்களாகும்.

முடிந்தால் பிடித்துக்கொள் என்பது போல சைகைசெய்வதை மீண்டும் அவர் செய்யாமல் இருப்பது நல்லது என்றார் ரோஜ்.

100 மீற்றர் ஓட்டம் முடிந்தபின் அரங் கத்தில் மக்கள் இருக்கும் திசையைப் பார்த்து போல்ட் தனது கைகளை விரித்து ஆரவாரம் செய்தது சக வீரர்களை அவ மதிப்பது போல இருந்தது.

22 ஆவது பிறந்த நாளை கடந்த வியாழக்கிழமை கொண்டாடிய உசைன் போல்ட் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டங்களில் உலக சாதனை படைத்து முதலிடம் பிடித்தார்.

# வெண்கல பதக்கம் வென்ற இந்திய வீரருக்கு பரிசு மழை



புதுடில்லி, ஓக.22

ஐம்பத்தியாறு ஆண்டுக ளுக்குப் பின்னர் இந்திய வீரர் ஒருவருக்கு ஒலிம்பிக் மல்யுத் தத்தில் பதக்கம் கிடைத்திருக் கிறது. சுசில்குமார் என்ற அந்த வீரர் வெண்கலப் பதக்கத்தை ஈட்டினார்.

பீஜிங் ஒலிம்பிக்கில் மல் யுத்தப்போட்டியில் இந்தியா சார்பில் சுசில் குமார் (66 கிலோ பிரிவு), யோகேஸ்வர் தத் (60 கிலோ), ராஜீவ்தேவர் (120கிலோ) ஆகிய மூவர் பங்கேற்றனர். இதில் யோகேஸ்வர் தோல்வி அடைந்தார்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சுசில்குமார் வெண்கலம் வென்று இந்த ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு 2 ஆவது பதக்கத்தை கைப்பற்றிப் பெருமையைத் தேடித்தந்தார்.

சுசில்குமார் முதல் சுற்றில் (கால் இறுதி முந்தைய சுற்று) உக்ரைன் வீரர் ஆண்ட்ரி ஸ்டேட் நிக்கிடம் தோற்றார்.

மல்யுத்தத்தைப் பொறுத்த வரை தொடக்க சுற்றில் தோல்வி அடையும் வீரருக்கு மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப் படும். அது 'ரீபேஜெஜ்' முறை என்று அழைக்கப்படும்.

அதன்படி சுசில்குமார் அமெரிக்க வீரர் டோக்ஸ் குவாட், பெலாரஸ் வீரர் ஆல்ப்ர்ட் ஆகியோரை அடுத்தடுத்து வென்றார். இதனால் வெண்கல பதக்க வாய்ப்புக்கான போட்டி கிடைத்தது. 'இதில் சுசில் குமார் 3-2 என்ற கணக்கில் கஜகஸ்தான் வீரர் லியான்டை தோற்கடித்து வெண்கலப் பதக்கம் பெற்றார்.

ஒலிம்பிக்கில் மல்யுத்த போட்டியில் 56 ஆண்டுகளுக்குப் பிறகு வெண்கல பதக்கம் கிடைத்து இருக்கிறது. இதற்கு முன்பு 1952 ஆம் ஆண்டு ஹெல்சிங்கி யில் நடந்த ஒலிம்பிக்கில் கஸ்கபா யாதவ் மல்யுத்தத்தில் வெண்கலப் பதக்கம் கொடுத்தார்.

வெண்கலப் பதக்கம் பெற்ற சுசில் குமாருக்கு நாடு முழுவதும் இருந்து பாராட் டுகள் குவிகின்றன. ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், துணை ஜனாதிபதி அன்சாரி, பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உட்பட அரசி யல் தலைவர்கள் பலர் வாழ்த்துத் தெரி வித்து உள்ளனர்.

அதோடு சுசில்குமாரைப் பாராட்டி பரிசு மழை குவிகின்றது. அவர் ரயில்வேயில் டிக்கெட் பரிசோதகராக உள்ளார். இதனால் ரயில்வே துறை ரூ. 55 லட்சமும், டெல்லி அரசு ரூ. 50 லட்சமும், மத்திய விளை யாட்டு அமைச்சர் எம். எஸ்.கில். ரூ. 20 லட்சமும், மத்திய மந்திரி ராம்விலாஸ் பஸ் வான் ரூ. 25 லட்சமும், கெய்ல் நிறுவனம் ரூ.15 லட்சமும் என்.எம்.டி.சி. மற்றும் ஆர்.ஐ.என்.எல்.நிறுவனங்கள் தலா ரூ.5 லட்சமும் வழங்குகின்றன என அறிவிக் கப்படுகின்றது.

சுசில் குமாருக்கு மொத்தம் ரூ.1.75 கோடி பரிசுத் தொகை குவிந்துள்ளது. ரயில்வேயில் உதவி வர்த்தக மேலாளராக பதவி உயர்வும் அவருக்கு வழங்கப்படு கின்றது.

# உற்சாகத்தில் இங்கிலாந்து!

பீஜிங், ஒக. 22

கடந்த நூறு ஆண்டுகளில் இங்கிலாந்து இப்போதுதான் பீஜிங் ஒலிம்பிக்கில் முதல் முறையாக அதிகபட்ச தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

1908 இல் லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 15 தங்கம் வென்ற அந்த அணி, 100 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு பீஜிங்கில் 15 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது. அடுத்த ஒலிம்பிக் போட்டி 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடக்கவுள்ள நிலையில், பீஜிங்கில் கிடைத்த தங்கப்பதக்கங்களால் இங்கிலாந்து ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

# புற்று நோயை எதிர்கொண்டதால் ஏற்பட்ட அனுபவமே வெற்றிக்கு வழிவகுத்தது என்கிறார் வெஸ்ரின்




புற்று நோயை எதிர்கொண்ட அனுபவமே வெற்றிக்கு வழிவகுத்தது என 10 கிலோமீற்றர் நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற நெதர்லாந்து வீரர் மார்டென் வான் வெஸ ரின் கூறினார். வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டி யில் 1 மணி 51 நிமிடம் 51.6 விநாடிகளில் இலக்கை எட்டி வெஸ்ரின் தங்கம் வென்றார்.

2 விநாடிகள் பின்தங்கிய பிரிட்டன் வீரர் டேவிட் டேவிஸ் வெள்ளியும்,ஜேர்மனியும் தோமஸ் லார்ஸ் வெண கலமும் வென்றனர்.


27 வயதாகும் வெஸ்ரினுக்கு இரத்தப் புற்றுநோய் இருந்ததை 2001 இல் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின் னர் கடுமையாகப் போராடி 2003 இல் உலக சாம்பியன் போட்டி யில் பங்கேற்றார். அவரது விடாமுயற்சியாலும், தளராத மனத்தாலும் இந்த ஆண்டு செவில் லேவில் நடைபெற்ற 25 கிலோமீற்றர் போட்டியில் வென்று உலக சாம்பியன் ஆனார்.

ஒவ்வோர் அடியாக சிந்திக்க புற்றுநோய் எனக்கு கற்றுக் கொடுத்தது என்கிறார் வெஸ்ரின். மருத்துவமனையில் கடும் அவதியில் இருக்கும் போது, அடுத்த நாள் அல்லது வாரம் குறித்தே சிந்திக்கத் தோன்றாது. அடுத்த மணிநேரம் குறித்தே சிந்திக்கத்தோன்றும். இது எனக்குப் பாடமாக அமைந்தது. இதையே இப்போட்டியிலும் கடைப்பிடித்தேன் - என்றார்.




ஆண்களுக்கான 1,500 மீற்றர் ஓட்டத்தில் பஹரேன் நாட்டு வீரர் ரஷீத்ராம்ஷி 3 நிமிடங்களில் 32.94 செக்கனில் அந்த மீற்றர் தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கத்தைச் தட்டிச்சென்றார்.

# மரதன் நீச்சலில் அசத்திய ஊனமுற்ற வீராங்கனை



பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உடல் தகுதியுடைய வீரர்களுடன் ஒலிம்பிக் போட்டியில் களமிறங்கி அசத்தியிருக்கிறார் உடல் ஊனமுற்ற ஒரு வீராங்கனை.

ஒலிம்பிக் போட்டியில் முழு உடல் தகுதியுடன் உள்ள வீரர், வீராங்கனைகளுடன் போட் டியிடத் தகுதிபெற்ற முதல் ஊன முற்ற வீராங்கனை தென் ஆபி ரிக்காவின் நதாலியே டு டாய்ட்.

மகளிர் 10 கி.மீ. மரதன் நீச்சல் போட்டியில் நேற்று முன்தினம் அவர் களமிறங்கினார். பந்தய தூரத்தை முழுவதுமாகக் கடந்தது டன், 16 ஆவது இடம்பிடித்து அசத்தினார் டு டாய்ட்.

2001 இல் நடந்த ஸ்கூட்டர் விபத்தில் இடது காலை இழந்த இவர், மன உறுதியுடன் போராடி ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக்கில் முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்ட [illegible] 10 கி. மீ. மரதன் நீச்சலில், ரஷ்ய வீராங்கனை வாரிசோ இல்சென்கோ தங்கம் வென்றார்.

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நிலை | நாடு | தங். | வெள். | வெண். | மொ. |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 46 | 15 | 22 | 83 |
| 2 | அமெரிக்கா | 30 | 35 | 35 | 100 |
| 3 | பிரிட்டன் | 18 | 12 | 11 | 41 |
| 4 | ரஷ்யா | 16 | 16 | 21 | 53 |
| 5 | ஜேர்மனி | 13 | 09 | 13 | 35 |
| 6 | ஆஸ்திரேலியா | 11 | 14 | 16 | 41 |
| 7 | வடகொரியா | 10 | 10 | 06 | 26 |
| 8 | ஜப்பான் | 09 | 06 | 09 | 24 |
| 9 | இத்தாலி | 07 | 07 | 10 | 24 |
| 10 | நெதர்லாந்து | 06 | 05 | 04 | 15 |
| 11 | பிரான்ஸ் | 05 | 13 | 15 | 33 |
| 12 | உக்ரைன் | 05 | 05 | 09 | 19 |
| 13 | ஜமெய்க்கா | 05 | 03 | 01 | 09 |
| 14 | ஸ்பெயின் | 04 | 06 | 02 | 12 |
| 15 | பெலாரஸ் | 04 | 03 | 08 | 15 |
| 16 | ருமேனியா | 04 | 01 | 03 | 08 |
| 17 | கனடா | 03 | 07 | 06 | 16 |
| 18 | போலந்து | 03 | 04 | 01 | 08 |
| 19 | செக் | 03 | 03 | 00 | 06 |
| 20 | சுலோவாக்கியா | 03 | 02 | 01 | 06 |
| 21 | நியூசிலாந்து | 03 | 01 | 05 | 09 |
| 22 | ஜோர்ஜியா | 03 | 00 | 03 | 06 |
| 23 | கியூபா | 02 | 06 | 06 | 14 |
| 24 | கென்யா | 02 | 04 | 02 | 08 |
| 25 | டென்மார்க் | 02 | 02 | 03 | 07 |
| 26 | தென்கொரியா | 02 | 01 | 03 | 06 |
| 27 | எதியோப்பியா | 02 | 01 | 00 | 03 |
| 28 | சுவிஸ்சர்லாந்து | 02 | 00 | 03 | 05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை நேரங்களில் கிராம அலுவலர்கள் சீருடையில் இருப்பது கட்டாயமாகிறது

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.23

கிராம அலுவலர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில் கட்டாயம் சீருடையில் காணப்பட வேண்டும்.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்கும் இந்த அறிவுறுத்தலை சுற்றறிக்கை மூலம் விடுத்துள்ளது.

ஆண் கிராம அலுவலர்கள் கறுப்பு நீளக் காற்சட்டையும் வெள்ளை யூனிக் கொலர் சேட்டும் அணிவதுடன் பெண் கிராம அலுவலர்கள் 'கிறீம்' நிறத்திலான சேலை அணிய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கடமையில் உள்ள வேளைகளில் உரிய அலுவலர் முத்திரையை அணிந்திருப்பதுடன் நாள் குறிப்பேட்டையும் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே இத்தகைய அறிவுறுத்தல்கள் அனுப்பப்படுகின்ற போதிலும் இதனை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் கவனம் செலுத்தாமையால் சுற்றறிக்கைகள் புறந்தள்ளப்படுவதாகவும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த புதிய நடைமுறை 01.01.2009 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (202)

# 1993 க்கு முன் ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் ஊதிய இலக்கத்தை மாற்றத்தேவையில்லை

யாழ்ப்பாணம், ஓக.23

1993.09.03 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதிய இலக்கத்தை சிவில் இலக்கத்திற்கு மாற்றத் தேவையில்லை என உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவின் பிரதம கணக்காளர் அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வடமாநில ஓய்வூதியர்கள் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்ததாவது:

1993.09.03 ஆம் திகதிக்கு முன்பு ஓய்வுபெற்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதியர்கள், விதவைகள், அநாதைகள் சேமலாப இலக்கத்தை சிவில் ஓய்வூதிய இலக்கத்திற்கு மாற்றுவது தொடர்பாக சந்தேகம் நிலவியது. இவ் விடயம் குறித்து உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவின் பிரதம கணக்காளர், ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோருடன் எமது சம்மேளனம் தொடர்பு கொண்டது.

இதை அடுத்தே குறிப்பிட்ட ஓய்வூதியர்கள் தமது உள்ளூராட்சி சேவை விதைவைகள், அநாதைகள் இலக்கத்தை சிவில் இலக்கத்திற்கு மாற்றத்தேவையில்லை என பிரதம கணக்காளர் சம்மேளனத்திற்குத் தெரிவித்துள்ளார். (202)

# பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு ஆறு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. வழங்கியுள்ளார்

நல்லூர், ஓக.23

குடாநாட்டின் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 6 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக கலாசார செயற்பாடுகளுக்கென 50 ஆயிரம் ரூபாவும் அரியாலை அருணோதய சனசமூக நிலைய கட்டடத் திருத்த வேலைகளுக்கென 80 ஆயிரம் ரூபாவும், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய சிறுவர் பூங்கா புனரமைப்பிற்கு ஒரு லட்சம் ரூபாவும்-

கோண்டாவில் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தளபாடங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், நல்லூர் வடக்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் கட்டடப் புனரமைப்பு வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும், உயரப்புலம் எம்.எம்.ரி வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கி, பாண்ட் வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்ய 70 ஆயிரம் ரூபாவும், பெரியபுலம் மகாவித்தியலயத்திற்கு போட்டோபிரதி இயந்திர கொள்வனவுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202)

# சைக்கிள்களுக்கு உரிமத் தகடுகள்

வடமராட்சி,ஓக.23

பருத்தித்துறை பிரதேச சபையினால் இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சபையின் புலோலி அலுவலகத்தில் வைத்து உரிமத் தகடுகள் சைக்கிள் உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.(202-236)

# நல்லூர் உற்சவத்தை ஒட்டி அழகியல் கண்காட்சி

நல்லூர்,ஓக.23

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் தையல் , அழகியல் பொருள்களின் கண்காட்சியையும் விற்பனையையும் நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணி வரையும் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறும்.

இக்கண்காட்சியையும், விற்பன்னையையும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி ஆரம்பித்து வைப்பார். (202-111)

# இறக்குமதி செய்யப்படும் உணவுகளைவிட உள்ளூர் உற்பத்திகளில் அதிகளவு போஷாக்கு

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் சுட்டிக்காட்டுகிறார்

வேலணை, ஓக.23

இறக்குமதி செய்யப்படும் உணவுகள் தான் போஷாக்கு நிறைந்தவை என்ற மனப்போக்கு குடாநாட்டிலுள்ள சகலரிடமும் உருவாகியுள்ளது. அவற்றை விட உள்ளூர் உற்பத்திகளில் அதிகளவு போஷாக்கை நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதே உண்மை.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலய ஆரம்பப் பிரிவின் ஏற்பாட்டில் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சுகாதாரப் பணிப்பாளர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரி வித்ததாவது:-

இந்தப் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சியை தாய்மாரே ஏற்பாடு செய்து நடத்துவதும் அவர்களே விளக்கமளிப்பதும் பாராட்டுக்குரியது. போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வு தாய்மாருக்கு மிக அவசியமானது. அதற்கு இவ்வாறான கண்காட்சிகள் மிகுந்த பயனுடையனவாகும்.

எம்மிடையே ஒரு தவறான கருத்து நிலவி வருகின்றது. இறக்குமதி செய்யப்படும் உணவுகளே சிறந்த போஷாக்குடையன என்பதே அது. ஆனால் அது தவறானதாகும்.

உள்ளூரில் கிடைக்கும் குரக்கன், பனம் உணவுகள் என்பவற்றில் அதிக போஷாக்குகள் உண்டு. குரக்கன், பனம் உற்பத்தி என்பவற்றில் சிறந்த உணவுகளைத் தயாரிக்க முடியும் என்பதை இக்கண்காட்சி மூலம் நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

**காரைநகர் பிரதேசத்தில் போஷாக்கு மேம்பட்டுள்ளது**

ஊர்காவற்றுறை, காரைநகர் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் சிறுவர் போஷாக்கு, தாய்மார் போஷாக்கு என்பவை மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருந்தன. 2 வருடங்களின் முன் காரைநகரில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போஷாக்கு 30 சதவீதத்திற்கு குறைவாகவே இருந்தன.

தற்போது போஷாக்கு மட்டம் அதிகரித்துள்ளது. ஏனைய பிரிவுகளைப் போல் இப்பிரிவிலும் போஷாக்கு மட்டம் மேம்பட்டுள்ளது. இதற்காக இங்கு ஒரு புரட்சிகர மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இம் மாற்றத்திற்குக் காரணமாய் இருந்த சுகாதார மருத்துவ மாதுக்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அனைவரதும் சேவை பாராட்டப்பட வேண்டியதே- என்றார். (202-267)

# ஊடகவியலாளர் தேவாவின் பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.23

கடந்த மேமாதம் 28 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட சக்தி தொலைக்காட்சி மற்றும் சக்தி எவ்.எம்மின் ஊடகவியலாளர் ப. தேவகுமாரின் 90 ஆம் நாள் பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வட்டுக்கோட்டையில் இடம்பெறவுள்ளது.

தமது பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை அவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (1)

# வடமாகாணத்தில் சுதேச மருத்துவத்துறையை மேம்படுத்தும் முயற்சியாகப் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஓக.23

வடமாகாணத்தில் சுதேச மருத்துவத் துறை அபிவிருத்தி செய்யப்பட்டு மேம்படுத்தப்படவுள்ளது. இதற்கான சுதேச மருத்துவ வேலைப்பட்டறை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 3 தினங்களுக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மாகாண பிரதம செயலாளர் சி. ரங்கராஜா, யாழ். அரச அதிபர் கே. கணேஷ், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரி. இராசநாயகம், மாகாண சுகாதார சுதேச வைத்திய செயலாளர் வைத்திய கலாநிதி எஸ். குமாரவேற்பிள்ளை, மாகாண சுதேச மருத்துவ பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சி. துரைரட்ணம், உள்ளூராட்சி ஆணையாளர் எவ். ஜோன்சன், சுதேச வைத்தியத்துறை சார்ந்த ஆலோசகர்களான வைத்திய கலாநதி திருமதி வி. செல்வநாதன், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் மற்றும் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட துறைசார்ந்த வல்லுநர்கள் இதில் பங்குபற்ற உள்ளனர்.

அழைக்கப்பட்ட அனைவரையும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண வைத்தியத்துறை பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

# நிகழ்வுகள்

நல்லூர், ஓக.23

தீவகம் வயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் சேவைத்திட்ட முகாம் நடத்தப்படவுள்ளது.

பொது மருத்துவ பரிசோதனை, குழந்தை மருத்தவ பரிசோதனை, கண்ணாடி வழங்கல், முதியோர் கௌரவிப்பு, பெருங்காடு பொதுக்கிணறு, சிவன் கோவிலடி பொதுக் கிணறு ஆகியவை துப்புரவு செய்தல், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்குதல், மரம் நடுகைத் திட்டம், குளப் புனரமைப்பிற்கு குளங்கள் தெரிவு செய்தல் ஆகிய திட்டங்கள் புனரமைக்கப்படவுள்ளன. (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.23

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.23

'ஜெய்க்கா' செயற்றிட்ட அமுலாக்கத்தின் கீழ் யாழ்.கல்வி வலயத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் கணிதக் கணித்தல் திறன்களை மேம்படுத்தும் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் வைத்து புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

காலை 9 மணிக்கு கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கும் முற்பகல் 11 மணிக்கு நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கும் பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண கோட்ட பாடசாலைகளுக்கும் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர் களுக்கான கருத்தரங்கும் செயல்பட்டறையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெற உள்ளன.

நவீன கற்பித்தல் முறையில் நவீன கற்பித்தல் உபகரணங்களின் பயன்பாடும் பிரயோகமும் தொடர்பான கலந்துரையாடல்களும் செயன்முறையும் இடம் பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (202-302)

* * *

வடமராட்சி, ஓக.23

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதிஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு "ஆழ்வார்கள்" என்னும் தலைப்பில் ஆசிரியர் வேல்.நந்தகுமார் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (202-236)

* * *

யாழ்.நாவலர் வீதியில் உள்ள யாழ். மத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிலையத்தில் சாயி சேவா சமிதியினரால் பாகவத புராண படிப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த திங்கட்கிழமையில் இருந்து தினமும் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்து நடைபெற்றுவரும் இந்த புராண படனம் நாளை ஞாயிற்றுக்கிழமை கிருஸ்ண ஜெயந்தி தினத்தில் நிறைவு பெறவுள்ளது. (202-302)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் நடத்தப்பட்ட சுவாமி விவேகானந்தர் கண்காட்சியை அதிபர் சோ. கருணேஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படத்தில் காணலாம். (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி மகாஜன ச.ச.நிலையம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக.23

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் அளவெட்டி மகாஜன சனசமூக நிலையம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

நிர்வாகச் செயற்பாடுகள், சமூகசேவைகள், புத்தக வெளியீடுகள், மரம் நடுகை, நூலகச் செயற்பாடுகள், முன்பள்ளிச் செயற்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சிறந்த சனசமூக நிலையமாக இது தெரிவாகியுள்ளது. (202)



வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அருணாசலம் அரியரத்தினம் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் வலிகாமம் மேற்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். இவர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.

வட்டு. சிவன் ஐக்கிய நாணய சங்கம், வட்டுக்கோட்டை அபிவி ருத்திச்சங்கம், வட்டு. மேற்கு இலக்கிய வட்டம், மாவடி பிரஜைகள் குழு ஆகியவற்றின் தலைவராகவும் இவர் சேவையாற்றி வருகின்றார்.

* * * * *

## மக்கள் முகம்



வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்வி கனகரத்தினம் முத்துமணி சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் வலிகாமம் மேற்கு மத்தியஸ்தர் சபையின் பதில் தவிசாளராகவும், வட்டு.மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியாகவும், சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினராகவும், சமுர்த்தி மகாசங்கப் பொருளாளராகவும், ஸ்ரீ களவியோடை முத்துமாரி அம்பாள் ஆலய நிர்வாகியாகவும் சேவையாற்றி வருகின்றார்.

* * * * *

யாழ்.செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளையில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிந்த ந.முரளி, கடந்த 28ஆம் திகதி முதல் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக யாழ்.அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார். (100)

* * * * *

அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் II இற்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் ஊர்காவற்றுறைப் பிரதேச வைத்தியசாலையில் முகாமைத்துவ உதவியாளராக கடமைபுரியும் ச.இராசநாயகம் சித்தியடைந்துள்ளார்.

இப்பரீட்சை 2007ஆம் ஆண்டு டிசெம்பர் 8ஆம் திகதி நடைபெற்றது. இப்பரீட்சையில் தோற்றியோருக்கான பெறுபேறுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

## யாழ்.வலயத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ்.கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஓகஸ்ட் மாத சம்பளம் வழங்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் கையொப்பமிட்டு, வங்கியூடாகச் சம்பளத்தைப்பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்கள். (202)

## கழிவு நீர் ஒயில் தவிர்த்தே வெளியேற்றப்படுகின்றது

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் ஒயில் தவிர்த்தே வெளியேற்றப்படுவதாக டிப்போ முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

டிப்போவில் சேரும் கழிவு நீர் வடிகால்கள் மூலமாக வெளியேற்றப்படும் போது இரண்டு, மூன்று கட்டமாக வடிகட்டியே வெளியேற்றப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202-236)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்
Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=
Diploma in Video Editing
முன்னணி Video Mixing Software களுடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=
Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=
பிரபல கணணிக்கணக்கியல் மென்பொருள்........
Tally செய்முறைப்பயிற்சிகளுடன் கம்பனிகணக்குகளையும் உள்ளடக்கி..
வகுப்புக்கள் ஆரம்பம் : 25/08/2008 09.00AM

நீங்கள்... 2008இல்
A/L பரீட்சை எழுதிய மாணவர்களா?????
அப்படியாயின்....
உங்களுக்கான சலுகைக் கட்டணத்துடனான கணனி கற்கைநெறிகளுக்கான பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளவும்.
Diploma in MS Office
Diploma in Programming Language
Diploma in Computer Hardware
Diploma in Desktop Publishing
Diploma in Multimedia
Diploma in AutoCAD(With 3D Modelling)
Diploma in Office Automation (For Working)
2000 மட்டுமே..
Certificate in Internet & Email
Certificate in Java, VB, C,C++ & Pascal
Certificate in Project Making
1000 மட்டுமே..
On line Classes
Free Study Pakage
Short Term Scheme
Fully Practical
விபரங்களுக்கும் விசாரணைகளுக்கும்:
eTouch COMPUTER SYSTEM
2nd Lane, உடுவில் வீதி, மருதனார்மடம், தொபே: 021-4590222

இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்துகள்





76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுகுமாரன்- சாந்தினி தம்பதியரின் அருந்தவப்புதல்வன் செல்வன்
நிவேஸ்
தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (23.08.2008) சனிக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, மாமாமார், அத்தைமார், சித்தப்பா, சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ''சுவாமி'' அருள் பெற்று பல்லாண்டு காலம் பலகலைகளையும் பெற்று சீரும் சிறப்புடனும் எல்லோரிடத்தும் அன்புடனும் பண்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.
தகவல்: அப்பா- அம்மா.
"மில்லேனியம் றெஸ்ரோறன்ற்",
76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(77381)
நிவேஸ்
23.08.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இந்த வாரம்

### ஒகஸ்ட் 23



இந்த ஒப்பந்தத்தை ஜேர்மன் அதிபர் ஹிட்லருக்கும், ரஷ்ய அதிபர் ஸ்டாலினுக்கும் நடைபெற்ற திருமணம் என சித்திரித்து வெளியான கார்ட்டூன்

இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாவ தற்கு முன்னர் ரஷ்யாவிற்கும் - ஜேர்மனிக் கும் இடையேயான நட்புறவு ஒப்பந்தம் 1939ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23இல் கைச்சாத்தானது. இது ஒரு போலி ஒப்பந்தம் எனக் கூறப்படுகின்றது. ஜேர்மனியோடு உள்ளூரப் பகை கொண்டி ருந்த ரஷ்யா, தன்னுடைய இராணுவ பலத்தை அதிகரிப்பதற்காக அவகாசத்தைப் பெறவே இந்தப் 'போலி' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

### ஒகஸ்ட் 24

1875 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 24 இல் கப்பல் கப்டனான மத்யூ வெப் என்பவர் ஆங்கிலக் கால்வாயை முதன்முதலான நீந்திக் கடந்தார். இச்சாதனையை நிகழ்த்த அவருக்கு 21 மணிநேரம் பிடித்தது. மத்யூ வெப் பின்னொரு நாளில் நயகரா நீர்வீழ்ச்சியில் நீந்த முற்பட்டபோது இறந்ததுதான் வரலாற்றுச்சோகம்.

### ஒகஸ்ட் 25



மைக்கல் பரடே

நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்து புரட்சியை உண்டு பண்ணிய ஜேம்ஸ்வாட் 1819 இலும், காந்தத்தையும், மின்சாரத்தையும் கொண்டு பல அற்புத சாதனைகளை உருவாக்கிய மைக்கல் பரடே 1867 ஆம் ஆண்டிலும் ஒகஸ்ட் 25 இல்தான் உயிர் நீத்தார்கள்.

### ஒகஸ்ட் 26



சீசர்

ரோமானியப் பேரரசர்களில் ஒருவனும், வெல்லமுடியாத வீரனுமான ஜூலியஸ் சீஸர் பிரிட்டனில் தரையிறங்கியது கி.மு 55 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 இல் தான். இறுதிக் காலத்தில் இவன் தன் நண்பர்களாலேயே குத்திப் படுகொலை செய்யப்பட்டான்.

### ஒகஸ்ட் 27



தபால் தலைகளுடன் ரோலண்ட் ஹில்

'பென்னி பார்த்திங்' என்னும் முதலாவது தபால்தலையை உருவாக்கிய பிரித்தானியாவைச் சேர்ந்த 'சேர் ரோலண்ட் ஹில்' 1879 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 27 இல் இறந்தார்.

### ஒகஸ்ட் 28



லியோ டால்ஸ்டாய்

உலகப் புகழ்பெற்ற நாவல்களான 'போரும் சமாதானமும்', 'அன்னா கரினினா' போன்றவற்றை எழுதிய ரஷ்ய எழுத்தாளரான 'லியோ டால்ஸ்டாய்' 1828 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28 ஆம் திகதி பிறந்தார்.

### ஒகஸ்ட் 29



ஆஷஷ் கிண்ணம்

1882ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் இங்கிலாந்து தோற்றுப்போனது. இங்கிலாந்து வீரர்களின் துடுப்பு மட்டைகள் எரிக்கப்பட்டு, அதன் சாம்பல் ஆஸ்திரேலியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது. இச் சாம்பல் வெற்றிக் கிண்ணமொன்றில் வைத்து சீல் செய்யப்பட்டது. இதுவே இப்போதைய 'ஆஷஷ்' கிண்ணம் எனப் பெயர் தோற்றம் பெற வழிவகுத்தது.

# தொலைக்காட்சிகளால் இளைய தலைமுறை



## சொற்சமர்



## சீரழிகிறது

மக்களின் வாழ்வை சீர்படுத்தவும் பிரச்சினைகளை வெளிக்காட்டவும் என்று உருவாக்கப்பட்டு, ஒளி பரப்பப்படும் தொடர்கள் பெருமளவில் பெண்களையே பாதிக்கின்றன. தொடர்களில் கற்பனைப் பாத்திரங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும், நெருக்குதல்களையும், அநியாயங்களையும், துக்கங்களையும் கண்டு ரசிகர்கள் கவலையடைந்து மனத்தாக்கத்திற்கு உட்படுகின்றனர். தொடர்களை விரும்பி பார்க்கும் பெண்கள் சில வேளைகளில் வாய்விட்டு அழுவது பரிதாபத்திற்குரியதே. அன்றாடம் பெருமளவு நேரத்தைத் தொடர்களில் செலவு செய்யும் பலர், பயனுள்ள செயல்களுக்கு செலவிடவேண்டிய நேரத்தை வீணாக்குகிறார்கள். மெகா தொடர்கள் கவலை, விரக்தி, ஏக்கம், எதிர்பார்ப்பு இவற்றைத்தான் எமக்குத் தந்து விட்டுச் செல்கின்றன. "மெகா தொடர்கள் பார்ப்பது மாரடைப்பு, இருதய நோய்களுக்கு வழிவகுக்கும்" என்று ஒரு சஞ்சிகையில் வாசிக்க நேர்ந்தது. இங்கு பலர் பொழுது போக்கிற்காக தொடர்களை பார்க்கின்றோம். பல தொடர்களை தினமும் பார்த்து மனதை அழுத்தி கொள்வது நல்லதல்ல. இவை நமது மனதை கனமாக்குகின்றன. மன அழுத்தத்தையும் தருகின்றன. தொடர்களின் பாத்திரங்களிடையான போராட்டங்களை நிஜ வாழ்வில் போட்டு குழப்பிகொள்வது குடும்ப பிரச்சினைகளுக்குக் கூட வழிவகுக்கும். மெகா தொடர்களைத் தயாரிப்பவர்களோ, ஒளிபரப்புவோரோ அதனால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. இவ்விடயத்தில் இளைய தலைமுறையும் தொடர்களில் அழுந்திச் சீரழியாது இருப்பது எதிர்காலத்திற்கு சிறப்பாக அமையும்.

க.மயூரன், 2009 கலைப்பிரிவு, யா/ மாதகல் சென்யோசப்.ம.வி.

## சீரழியவில்லை

தொலைக்காட்சியை மனிதன் பயன்படுத்தும் முறையே அதன் விளைவினைத் தீர்மானிக்கின்றது. ஏகப்பட்ட பயனுள்ள விடயங்களைத் தொலைக்காட்சி நமக்குத் தருகின்றது. ஓர் அறையினுள் இருந்தவாறே உலக நடப்புக்களை உடனுக்குடன் அறிந்துகொள்ளக்கூடிய வசதியை தொலைக்காட்சியினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக நாம் சென்று கலந்துகொள்ள முடியாத நிகழ்வுகளையெல்லாம், நேரே பார்ப்பதை விடவும் தெளிவாகவும் விவரமாகவும் அறியமுடியும். உதாரணமாக தற்போது சீனாவில் நடைபெற்று வருகின்ற ஒலிம்பிக் போட்டிகளை எம்மைப் போன்ற கோடிக்கணக்கானோர் நேரடியாகத் தரிசிக்க முடியாத நிலையில், தொலைக்காட்சியூடாகவே நிகழ்வுகள் நடைபெறும் அதே கணத்திலேயே அவற்றைப் பார்த்து இன்புற முடிகின்றது.

நாம் வாழ்கின்ற சூழலில் ஏற்படும் புறத்தாக்கங்கள் நம் மன அமைதியைக் குழப்புகின்றன. தினமும் ஏதோ ஒரு வடிவத்தில் பிரச்சினைகள் முளைத்தபடியே இருக்கின்றன. இவற்றையெல்லாம் சிறிது நேரத்திற்காவது மறந்து, மன உளைச்சல்களிலிருந்து விடுபட தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படும் கலை, இசை தொடர்பான நிகழ்வுகள் துணை புரிகின்றன. மாணவர்களின் கல்வியறிவை வளர்ப்பதற்கான பல நிகழ்ச்சிகள் தற்போது ஒளிபரப்பாகி வருகின்றன. வெறுமனே வாசித்துப்பெறும் அறிவினை விடவும் கட்புலரீதியாகப் பெறுகின்ற அறிவு மாணவர்மனதில் ஆழப்பதிகின்றன. அவ்வகையில் கல்வி விருத்திக்கும் துணைபுரிவதாகத் தொலைக்காட்சிகள் விளங்குகின்றன.

ந.மலர்விழி, மானிப்பாய்.

**இளவல்களுக்கு:** 'இளைஞர்களை வழிப்படுத்தும் பொறுப்பு பெற்றோருடையதா? ஆசிரியர்களுடையதா? என்ற தொனிப்பொருளில் இனிவரும் 'சொற்சமரில்' கருத்தாடல்கள் இடம்பெறும். எனவே இத்தொனிப்பொருளை பிரதிபலிக்கும் உங்கள் படைப்புகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள்.

# தலையெழுத்தைத் தீர்மானிக்கும் கையெழுத்து

பேனா பிடித்து எழுத 'ஆஸி' யில் பயிற்சி என்ற செய்தியை அண்மையில் உதயனில் படிக்க நேர்ந்தது. ஆஸ்திரேலியாவுக்கு மட்டுமல்ல சகலருக்குமே இந்தச் செய்தியும், பயிற்சியும் மிகவும் அவசியமானதாகும். குறிப்பாகக் கல்விச் சமூகம் இந்த விடயத்தில் ஊக்குவிக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதில் வேறுபாடு இருக்கமுடியாது. கணினி, லப்ரொப், மொபைல் போன் வாடிக்கையாளர்கள் வேகமாக முன்னேறிவரும் இவ்வேளையில், அத னதன் வேகங்களைக் கட்டுப்படுத்தாத வகையில், கையினால் அழ காக எழுதப்பட வேண்டிய 'உயிரோட்டமான ஒரு சமூகம் எமக்குத் தேவை' - என்பதையும், அறிவாளர்கள் நிச்சயம் எடுத்துரைக்க இறை வன்தான் கருணை தரவேண்டும்.

கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.

அறுபது வீதமானவர்கள், அடுத்த சந்ததிக்காகத் தத்தமது செயற் பாடுகளைச் சொந்தக் கையெழுத்தில் எழுதி ஆவணப்படுத்தி, கோவைப் படுத்தி வருகிறார்கள். முப்பது வீதமானவர்கள் நவீன சாதனங்களை ஆதாரமாகக் கொண்டு, நேர்த்தியாக்கியதாய் ஆவணப்படுத்திப் பயன்படுத்துவதில் வல்லவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் காலத்தோடு ஒட்டிய மாற்றமுறையவர்கள். தேவையானவர்களும் கூட. பத்துவீத மாணவர்கள் நவீனத்திற்கும், பழமைக்கும் செல்லமுடியாமல், தெந்தெட்டாக, மற்றவர்களின் உதவியோடு, பேச்சளவில் தத்தமது கடமையை வடிவமைப்பவர்கள். மேற் கூறிய மூன்று வகையினரும், நம்பகத்தன்மையைப் பேணுவதில், தம்மை உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள் என்றால் அதற்குரிய மூலகாரணம் சொந்தக் கையெழுத்தேயாகும்.

### நியமனக் கடிதம் ஏற்றல்

புதிய நியமனம் பெற்றுக் கடமையை ஏற்கும் நியமனதாரிகள் தாம் கடமையை ஏற்கும்போது, ஏற்கனவே கணினியில் தயார் செய்யப்பட்ட பத்திரத்தில், நியமன அம்சங்களையும் கணினியில் உள்ளடக்கி, கையொப் பத்தை மட்டும் வைத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்குவதென்பது பொருத்தமற்றதென்றே கொள்ள வேண்டும். காரணம், பொறுப்புவாய்ந்த, சட்டபூர்வமான ஒரு பதவியை ஏற்கும்போது பயபக்தியாகவும், உணர்வுபூர்வமாகவும், கடமையைச் சரிவரச் செய்யும் முகமாகச் சொந்தக் கையெழுத்தில் கடிதம் எழுதிக் கடமையைப் பொறுப்பேற்பதே கடமைக்கும் பொறுப்பு! கடவுளுக்கும் சிறப்பு. இக்கடு பொறுப்பினை யார் ஊக்கப்படுத்துகிறார்களோ அவர்கள் பாக்கியவான்களே.

(வளரும்)






# கவிதை புனைவோம்

## இளவட்டங்கள்

ஒரு கோடை வெயில்
வெயிலுக்குப் பயந்து போராடும்
மனிதர் கூட்டம் - நடுவே
இறக்கை கட்டி
உல்லாசமாகப் பறக்கும்
இளவட்டங்கள் வயதினர்கள்.
தாங்களே மேல் என்று நினைக்கும் வயது
அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் மனது
பள்ளியில் விளையாடும் பருவ கோலங்கள்
பல கதைகள் பேசித் திரியும் காலங்கள்
கலை, கல்விகளில் தீவிர ஆர்வங்கள்
நிலை தடுமாறும் சிந்தனைகள்
கண்களைத் தவிக்கவிட்டு
தேடித் திரியும் சில உள்ளங்கள்
இரு மனங்கள் இணையும் நேரகாலங்கள்
அன்றில்பறவை போல்
வாழும் சில இதயங்கள்
சுயமாக வெற்றிநடைபோடும் கால்கள்
மழையென்ன, வெயிலென்ன
துள்ளித்திரியும் பறவைகளுக்கு
ஏது விடுமுறை............?

நா.கஜா
திருநெல்வேலி.

## பிறந்த கிழமையை அறிந்துகொள்ள

உங்கள் நண்பர்களின் பிறந்ததினத்தை தெரிந்து கொண்டால் அவர் பிறந்த கிழமையை உங்களாலும் சொல்ல முடியும். நம்பமுடியவில்லையா? இங்கு தரப்பட்டுள்ள ஆண்டு, மாதம், கிழமை தொடர்பான 3 அட்டவணைகளின் துணை கொண்டு இதனை நீங்கள் சாதிக்கலாம்.

உதாரணமாக உங்கள் நண்பர் 30.03.1981இல் பிறந்தவராயின் அவர் பிறந்த ஆண்டு, மாதம் என்பவற்றுக்கு பொருத்தமான இலக்கங்களை அவற்றுக்குரிய அட்டவணைகளிலிருந்து கண்டுபிடித்து, தந்திர எண், பிறந்த திகதி என்பவற்றோடு கூட்ட வேண்டும். அதன்போது வருகின்ற மொத்தத் தொகையை 7ஆல் பிரிக்கவேண்டும். அப்போது மிகுதியாய் வருகின்ற இலக்கம், கிழமை அட்டவணையில் எந்தக் கிழமைக்குரியதோ அதுவே அவரின் பிறந்த கிழமையாகும்.

**செய்முறை:-**

திகதி -30
81 ஆம் ஆண்டுக்குரிய எண்-04
03 ஆம் மாதத்துக்குரிய எண்-05
தந்திர எண் -06
மொத்தம் = 45
7 | 45 = 6, மிகுதி=3
மிகுதி 3 இற்குரிய கிழமை = திங்கள்

ஆண்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | | 4 | 5 |
| 6 | 7 | | 8 | 9 | 10 | 11 |
| | 12 | 13 | 14 | 15 | | 16 |
| 17 | 18 | 19 | | 20 | 21 | 22 |
| 23 | | 24 | 25 | 26 | 27 | |
| 28 | 29 | 30 | 31 | | 32 | 33 |
| 34 | 35 | | 36 | 37 | 38 | 39 |
| | 40 | 41 | 42 | 43 | | 44 |
| 45 | 46 | 47 | | 48 | 49 | 50 |
| 51 | | 52 | 53 | 54 | 55 | |
| 56 | 57 | 58 | 59 | | 60 | 61 |
| 62 | 63 | | 64 | 65 | 66 | 67 |
| | 68 | 69 | 70 | 71 | | 72 |
| 73 | 74 | 75 | | 76 | 77 | 78 |
| 79 | | 80 | 81 | 82 | 83 | |
| 84 | [illegible] | [illegible] | [illegible] | | 88 | [illegible] |
| 90 | 91 | | 92 | 93 | 94 | 95 |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |

மாதம்

| | |
|---|---|
| தை | 2 |
| மாசி | 5 |
| பங்குனி | 5 |
| சித்திரை | 1 |
| வைகாசி | 3 |
| ஆனி | 6 |
| ஆடி | 1 |
| ஆவணி | 4 |
| புரட்டாதி | 0 |
| ஐப்பசி | 2 |
| கார்த்திகை | 5 |
| மார்கழி | 0 |

திகதி

| | |
|---|---|
| சனி | 1 |
| ஞாயிறு | 2 |
| திங்கள் | 3 |
| செவ்வாய் | 4 |
| புதன் | 5 |
| வியாழன் | 6 |
| வெள்ளி | 0 |

[illegible]
2000பின் 5

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற புதிய பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## நாடும் நடப்பும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இன்று முக்கிய பிரச்சினையாக உருவெடுக்கும் அசுத்தமான நிலத்தடித் தண்ணீர்

யாழ்ப்பாண குடாநாடானது இன்று பல பிரசசினைகளை சந்தித்து வருகின்றது. அவற்றில் சுத்தமான தண்ணீர் கிடைப் பனவு என்பது மிக முக்கியமான பிரச்சி னை யாகும். இன்று குடாநாட்டின் சில பகுதிகளி லேயே இத்தண்ணீர்ப் பிரச்சினை காணப் பட்டாலும் எதிர்காலத்தில் இப்பிரதேசம் முழு வதிலும் ஏற்படக்கூடிய பிரச்சினையாக இது மாற் றமடையும் என்பது அறிஞர்களின் கருத்து. ஏனெனில் யாழ்ப்பாணக் குடாநாடு முழு வதும் தரைக்கீழ் நீர்வளத்தையே முற்று முழுதாக நம்பி இருக்கின்றது. இவ்வளம் பாதிக்கப்படும்போது யாழ்ப்பாண மக்களின் ஜீவனோபாயத்துக்கு கூட தண்ணீர் அற்றுப் போகும் நிலை ஏற்பட்டு யாழ்ப்பாணக் குடா



தரைக்கீழ் நீர்மட்டமும் மீள் நிரப்புகை செயற் பாடும்.

நாடு பாலைவனமாக மாறும் அபாயம் உண்டு. எனவே இன்றே இவ்வளத்தினை பாதுகாக்க நடவடிக்கை களை மேற்கொள்வ தும் எதிர்கால சந்ததி யினருக்கு இவ்வளத் தினை கையளிப்பதும் எம் அனைவரின் கட மையாக உள்ளது.

தரைக்கீழ் நீரானது மூன்றாம் உலக நாடு களில் உணவு மற்றும் வாழ்வாதாரத் திற்கு மிகவும் முக்கியமான ஒரு கூறாகும். குடி தண்ணீர் விவசாயம் மற்றும் பல தேவைக ளுக்காக அதிகளவில் வேண்டப்படும் வள மாக இது காணப்படுகின்றது. ஏனெனில் இது பாவனைக்கு இலகுவானதாகவும் எல்லோரா லும் பாவிக்கப்படக் கூடியதாகவும் இருப்ப துடன் இன்னும் பல வழிகளிலும் சாதகமான தாக இருப்பது கண்கூடு. தரைக்கீழ் நீர்ப் பரப்பிலிருந்து பெறப்படும் ஒரு கியுபிக் மீற் றர் நீரினை பயன்படுத்தும்போது பெறப்படும் வருமானமானது ஒரு கியுபிக் மீற்றர் மேற் பரப்பு நீரைப் பயன்படுத் தும்போது கிடைக் கும் வருமானத்தை விட அதிகமாகும் என் பது பல ஆய்வாளர்களின் கருத்து. தரைக் கீழ்நீர் இந்த வகையில் வறுமையைக் குறைக் கும் ஒரு கருவியாக கருதப்படுகின்றது. அந்த வகையில் இத்தரைக்கீழ் நீர் வளத் தினை அபிவிருத்தி செய்வது , பாதுகாப்பதும் பல பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என்பது திண்ணம். யாழ்ப்பாணக் குடாநாட் டின் பொருளாதாரமும் தரைக்கீழ் நீர்வளத்தி லேயே பெரிதும் தங்கியுள்ளது.

### தரைக்கீழ் நீர் என்றால் என்ன?

தரைமேற்பரப்பில் உள்ள நீர் மண் துணிக் கைகள் இடையே அல்லது பாறை களிடையே உள்ள துவாரங்கள் மூலம் கீழ்ச்சென்று தரைக்குக்கீழே நீர் மட்டத்தை உருவாக்கு கின்றது. இதனையே தரைக்கீழ் நீர் என்பர். இவ்வாறு உட்புகும் நீரானது உள்ளே பாறை களிடையே காணப்படும் துவாரங்களினுள்ளே ஒன்றாகி அடியில் தாய்ப்பாறையையோ (Bed Rock) அல்லது ஒரு நீர் உட்புக முடி யாத பாறையையோ அடித்தளமாகக் கொண்டு ஒரு நீரோட்டமாக அமைகின்றது. இந்த தரைக்கீழ் நீரோட்டம் (Water Table) சில இடங் களில் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் காணப்படும். இது சிலவேளை களில் நீரூற்றுக்களுடனோ ஆற்றுடனோ கலந்து தரைக்கு மேலே மேற்பரப்பு நீரோட் டமாகவும் மாறி ஓடக்கக்கூடும்.

யாழ்ப்பாணக் குடாநாடு இயற்கை யாவே சுண்ணக்கல் பாறைகளைக் கொண்ட பிரரேசமா கும். இங்கு நீர் சார்ந்த அனைத்து நடவடிக் கைகளுக்கும் தரைக் கீழ் நீரினையே பயன் படுத்த வேண்டியுள்ளது. எனவே இங்கு தரைக்கீழ் நீரானது அதிகளவில் உறிஞ்சப் படுகின்றது. இவ்வாறு அதிகரித்த நீர் பாவ னையினால் தரைக்கீழ் நீரின் அளவு குறைவ டைகின்றது. இதற்கு மீள்நிரப்புகை செயற் பாடு முக்கியம் பெறுகின்றது.

### மீள் நிரப்புகை (Recharge) என்றால் என்ன?

தரைக்கீழ் நீர் பாவ னைக்காக அதிகம் உறிஞ் சப்படுவதானலும் நீரோட்டங்களுடன் கலந்து கடலில் கலப்பதாலும் அதன் நீர்மட் டம் குறைவடைகின்றது. இவ்வாறு தரைக் கீழ் நீரோட்டம் குறையும் போது அதன் அளவை மீள அதிகமாக்கும் வகையில் ஒரு வட்டச் செயன்முறையில் இயற்கையாகவே மீள நிரப்பும் செயற்பாடு செய்யப்படுகின்றது. இவ்வாறு குறையும் தரைக்கீழ் நீர் மட்டம் மீளவும் நிரப்பப்படும் செயன்முறையையே மீள் நிரப்புகை என்பர். இச்செயன்முறைக்கு தரைத் தோற்றத்தின் அமைப்பு, மண் இணைப்பு, தாவரப் போர்வை, சாய்வு, மழைவீழ்ச்சி அடர்த்தி என்பன காரணமாகின்றன. மேற்

## யாழ்.மக்களின் ஜீவனோபாயத்துக்குக் கூட தண்ணீர் அற்றுப் போகும் அபாய நிலை

பரப்பில் வரும் மழை நீர் பள்ளமான பகுதி களில் தேங்கி மண்ணினூடே வடிந்து சென்று தரைக்கீழ் நீர் மட்டத்திற்கு செல் கின்றது.

### தரைக்கீழ் நீர் சார்ந்த பிரச்சினைகள்

தற்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட் டில் தரைக்கீழ் நீர் தொடர்பான பிரச்சினைகள் முனைப்புப் பெற்று வருகின்றன. பல பகுதி களில் தரைக்கீழ் நீர் முற்றாக இல்லாமலும்

**சசிகலா பத்மநாதன்,**
**நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,**
**நல்லூர் பிரதேச செயலகம்.**

சில இடங்களில் மிகக் குறைந்த அளவிலும் சில இடங்களில் உவர் நீர் கலந்தும் இருப் பதை ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இவ் வகையான பிரச்சினைகள் எதிர்வரும் காலங் களில் மேலும் அதிகரிக்கும் நிலை காண்ப்ப டுகின்றது. இந்நிலையில் எம்பிரதேசத்தில் தரைக்கீழ் நீர் சார்ந்து நாம் எதிர்நோக்கும் பிரச் சினைகளாக பின்வருவனவற்றை கூறலாம்.

1. தரைக்கீழ் நீரானது முற்றாக இல் லாமல் போதல்-இதனால் தரைக்கீழ் நீர்மட் டம் முற்றாக வற்றிப்போகும்.

2. தரைக்கீழ் நீர் மாசடைதல்-சுத்தமான நீரில் சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய சேதன இரசாயனப் பொருள்களின் சேர்க்கை யினால் நீர் பாவனைக்கு உதவாத நிலைக்கு மாறுதல் என்பன இன்று பலராலும் எச்சரிக் கப் படும் பிரச்சினைகளாக உள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்த வரை தரைக்கீழ் நீரானது பின்வரும் சந்தர்ப்பங் களில் முற் றாக இல்லாமல் போகலாம்.

1. அதிகமான நீர் பாவனை
2. குறைவான மீள் நிரப் புகை

தரைக்கீழ் நீர் மட்டத்தின் அளவை விட அதிகமாக நீரினை பாவனைக்காக எடுப் பதனால் தரைக் கீழ் நீர்வளம் அற்றுப்போகும் நிலை ஏற்படுகின்றது. சில கிணறுகள் முற் றாக வற்றிப்போகும் நிலையும் கரையோரப் பகுதிகளை அண்டிய இடங்களில் உள்ள கிண றுகளில் நீர் வற்றிப்போக கடல்நீர் உட் புகுந்து நீரின் தன்மை கெட்டுப் போகும் நிலை யும் ஏற்படலாம்.

குறைவான மீள் நிரப்புகை என்னும் போது மரங்களை அதிகம் வெட்டுதல், காடழிப்பு போன்வற்றால் மழைவீழ்ச்சி குறைவடை தலும் கட்டடங்களை அதிகம் அமைத்தல், குளங்கள், வெள்ளநீர் வாய்க் கால்களை தூர்ந்து போக விடல், குளங்கள் இருந்த பகுதியில் வீடுகள் அமைத்தல், மழை நீர் உட்புகாத வாறு சீமெந்து தளங்களை அமைத்தல் போன்ற செயற்பாடுகளால் நீர் ஊடுவடிதல் செயன்முறை தடுக்கப்பட்டு கழுவு நீரோட் டம் (runoff) அதிகரிக்கின்றது. இதனால் மீள் நிரப்புகை செயன்முறை பாதிக்கப்படுவ தோடு பெறப்படும் மழை வீழ்ச்சியும் வீணே கடலில் கலந்துவிடுகின்றது. அடுத்து நீர் மாசடைதலை நோக்கின் இது பல வழிகளில் மாசடைகின்றது. இத்தரைக்கீழ் நீரானது மேற்பரப்பு நீருடன் ஒப்பிடும் போது அதனை விட சுத்தமானதாகவும் இலகுவில் அசுத்தம டையும் தன்மை அற்றதாகவும் காணப்படு கின்றது. எனினும் அவ்வாறு அசுத்தமானால் மீளத் தூய்மையாவதும் மிகக் கடினம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 . 08 . 1930



உதிர்வு 04 . 09 . 2007

### அமரர் தம்பிமுத்து நல்லையா

நாளை (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்த னையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ்.வீதி,
வல்வெட்டித்துறை. (சி/554233)

தகவல்:
சரஸ்வதி (மனைவி).

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 05 . 04 . 1932



மறைவு 24 . 07 . 2008

### அமரர் முருகன் பூரணம்

கடந்த 24.07.2008 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் முருகன் பூரணம் அவர்களின் அந்தி யேட்டிக்கிரியைகளும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (23.08.2008) சனிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறஇருப்பதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர். (77342)

குடும்பத்தினர்.

---

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03.10.1917



மறைவு 03.09.2007

திதி:23.08.2008



### சண்முகம் காசுபதி அம்மா அவர்கள்

**ஆண்டுகள் பல ஆயிரம் சென்றாலும் எங்கள் சந்ததிக்கு**
**உங்கள் நல்ஆசிகள் என்றும் உண்டு**
**அன்னையே உன் ஆத்மா மட்டுவில் மருதடி**
**விநாயகர் திருவடிகளில் சரணே.**

எங்கள் அன்னையின் முதலாம் ஆண்டு நினைவாக அவர் இஷ்ட தெய்வமாம் மட்டுவில் மருதடி விநாயகர் ஆலயத்திலும் வண்ணை சிறீகாமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) ஆலயத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெற்று தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

சின்சபா வீதி,
கொழும்பு- 06 (சி/554200)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குற்றம் இழைத்த தரப்பே குற்றம் சுமத்தும் விநோதம்

ஐந்து மாதங்களுக்கு மேல் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸநாயகத்துக்கு எதிராக ஒருவாறு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்துவிட்டது இலங்கை அரசு.

இதனையடுத்து, இதுவரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் - தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் - தடுத்து வைக்கப்பட்டு அவலத்தை அனுபவித்து வந்த திஸநாயகம் ஒருவாறு விளக்கமறியலுக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

எனினும், திஸநாயகத்துக்கு எதிராக அரசு முன் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பலவீனமானவை எனத் தெரிவித்துள்ள சுதந்திர ஊடக இயக்கம் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகங்களை மிரட்டும் முயற்சி இது என்றும் கண்டித்திருக்கின்றது.

இலங்கையில் இருந்துகொண்டு தமிழர் தரப்பின் நியாயத்தை - இலங்கையின் உண்மை நிலைவரத்தை - ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் வெளிப்படுத்தி, தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்தும் ஊடகவியலாளர்களே இப்போது அதிகம் இலக்கு வைக்கப்படுகின்றார்கள்.

இத்தகையோருக்கு கள நிலைவரம் பற்றிய உண்மைகளைத் தொகுத்து வழங்கும் தமிழ் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்படுகின்றார்கள், தண்டிக்கப்படுகின்றார்கள், அச்சுறுத்தப்படுகின்றார்கள். அது மற்றொரு விடயம்.

ஆனால் இலங்கையில் தமிழர்கள் மத்தியிலிருந்து ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் விடயங்களை அம்பலப்படுத்தும் திறமையுள்ள ஊடகவியலாளர்களின் நிலைமை இங்கு அதோ கதிதான்.

ஓரளவு உண்மைகளை இந்த இரு மொழிகளில் வெளிப்படுத்தி உலகுக்கு உரைத்து வந்த நிமலராஜன், சிவராம் போன்றோர் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் எஞ்சி - மிஞ்சி - இருந்து ஆங்கிலத்தில் ஆக்கபூர்வமாகப் பணியாற்றிய திஸநாயகமும் இன்று கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்தப்பட்டு விட்டார்.

இனவாதத்தைத் தூண்டி அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முனைந்தார் என்று பொத்தம் பொதுவில் திஸநாயகம் மீது இப்போது குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டுவது போல, இதனை - இத்தகைய குற்றச்சாட்டின் கீழ் ஊடகவியலாளர் ஒருவருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்த எத்தனிப்பதை - இலங்கையில் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் விடுக்கப்பட்ட கடும் அச்சுறுத்தலாகவே மக்கள் கொள்ளவேண்டும்.

தமிழ் ஊடகவியலாளர் ஒருவரைப் பார்த்து 'இனவாதத்தைத் தூண்டி அரசுக்கு அபகீர்த்தி' ஏற்படுத்தினார் என்று குற்றம் சுமத்தும் அடிப்படை யோக்கியதையோ - தகுதியோ - கடந்த அறுபது ஆண்டு காலமாக இலங்கையை ஆண்ட எந்த அரசுக்கும், அதிகாரத்துக்கும் இல்லவே இல்லை என்பதுதான் உண்மை நிலை.

இந்தத் தீவில் இனவாதத்தைத் தூண்டி, இந்தத் தீவின் மக்களை இனக்குழுமங்களாகப் பிரியவைத்த கொடுமையைப் புரிந்தவையே சிங்கள - பௌத்த மேலாதிக்கத்திலும், மேலாண்மைத் திமிரிலும் விளைந்த கொழும்பு அரசுகள்தாம்.

சிறுபான்மையினரான தமிழரை இனவழிப்புச் செய்வதற்காகக் காலத்துக்குக்காலம் ஒடுக்குமுறைச் சட்டங்களையும் அடக்குமுறை விதிகளையும் உருவாக்கி, பேரினவாதத்தைத் தூண்டி வளர்த்தவையே கொழும்பு அரசுகள்தாம்.

தமிழினத்தின் இருப்புக்கே அடிப்படையான நில உரிமை, மொழி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை, இனத்துவத்தைப் பேணிக் காக்கும் உரிமை என்பனவற்றை சிதைத்தழித்து, தமிழினத்தின் பண்பாட்டு வாழ்வுக்கே பெருநாசம் செய்யும் நிர்வாகக் கட்டமைப்பாகத்தான் கொழும்பு அரசுகள் வடிவம் கொண்டு நிற்கின்றன.

தனிச் சிங்களச் சட்டம், உயர் கல்விக்கு மாவட்ட ரீதியான தெரிவு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற வரிசையில் கடைசியாக வந்திருக்கும் அவசரகாலச் சட்ட விதிகள் வரை அனைத்துமே இப்படி இனவாதக் கண்ணோட்டத்தோடு - தமிழ் இன சம்ஹாரத்தை இலக்காகக் கொண்டு - நடைமுறைப் படுத்தப்பட்டவைதான்.

அத்தகைய இனவாதக் கண்ணோட்டத்தோடு தமது ஆட்சிக் கட்டமைப்புகளை நிறுவி, முன்னெடுத்துச் செல்லும் கொழும்பு அரசு நியாயத்துக்காகப் போராடும் தமிழர் தரப்பைப் பார்த்து 'இனவாதத்தைத் தூண்டுகின்றார்' - எனக் குற்றம் சுமத்துவது அபத்தத்திலும் அபத்தம்.

அதுவும் ஒருபுறம் இன சமரசத்துக்கு ஆப்பு வைத்து, தமிழர்களை மூன்றாம் தரப்பாக நடத்தி, அதன்மூலம் இனவாதத்தைத் தூண்டித் தனக்குத் தானே அபகீர்த்தியை ஏற்படுத்திக் கொண்டுள்ள அரசு-

அரசின் அராஜக அத்துமீறல்களை ஒரு பத்திரிகையாளனுக்கு உரிய உரிமையுடன் உண்மையை வெளிப்படுத்திவந்த தமிழ் ஊடகவியலாளன் ஒருவனைக் கூண்டில் நிறுத்தி, அவர் 'வன்முறையைத் தூண்டி, அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தினார் என்று' குற்றம் சுமத்துவது வேடிக்கையிலும் வேடிக்கையாகும்.

# 9 மாதங்களாக நிவாரண உதவியின்றி வடமராட்சி கிழக்கு மீனவர்கள் பாதிப்பு

## கடற்றொழில் சங்கம் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக.23

வடமராட்சி கிழக்கின் மீனவக் குடும்பங்களுக்கு கடந்த 9 மாதங்களாக நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் இம் மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்வதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ்.அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கடந்த 9 மாதங்களுக்கு மேலாக எவ்வித நிவாரண உதவிகளும் கிடைக்காத நிலையில் மிகவும் கஷ்டப்படுகின்ற நிலையைச் சுட்டிக்காட்டி வடமராட்சி கிழக்கின் குடத்தனை வடக்கு, பொற்பதி ஆகிய இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். அரச அதிபரிடம் தமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரி மகஜர் ஒன்றைக் கையளித்த னர்.

வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் மட்டுமே ஒரு குறிப்பிட்ட தூரம் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகின்றது. சில தினங்களில் ஒரு மணி நேரம் வரையே தொழிலுக்கு அனுமதிக்கப்படுகின்றது.

இப் பகுதியைச் சேர்ந்த ஏனைய மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்கின்ற நிலையில் மீனவர்கள் மட்டும் எவ்வித உதவியும் இன்றிக் கஷ்டப்படுகின்றனர். இவ்வாறு சுமார் 280 குடும்பங்கள் எவ்வித உதவிகளுமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளன.

தங்களது கஷ்டநிலை குறித்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரிடம் மூன்று தடவைக்கு மேலாகவும் யாழ்.அரச அதிபரிடம் இரண்டு தடவைகளுக்கு மேலாகவும் எடுத்துக் கூறியதாக பாதிக்கப்ப ட்டவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் குடத்தனை வடக்கு, பொற்பதி ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு வழங்குவதற்கென உலக உணவுத் திட்டத்தில் பொருள்கள் வழங்கப்பட்டதாக சங்கப் பிரதிநிதிகளிடம் யாழ். அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அரச அதிபரால் கூறப்பட்டபடி தங்களுக்கு குறிப்பிட்ட பொருள்கள் வழங்கப்படவில்லை எனவும் அது குறித்து தாங்கள் அரச அதிபருக்கு எடுத்துக் கூறியதாகவும் சங்கத்தின் தலைவர் மா. ரவீந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

நிவாரணம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படும் என அரச அதிபர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

(202-111)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஒக. 23

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் 13 ஆவது ஆண்டாக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

* உடுவில் ஆலடி சிந்து வி.க எதிர் சுதுமலை யுவசக்தி வி.க.
* மயிலிட்டி இளைஞர் ஒன்றிய வி.க எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் வி.க.

(1-86)

* * *

இருபாலை சிறிமுருகன் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி முன்றலில் கி.தங்கவடி வேல் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வைத்தியகலாநிதி லயன் வை. தியாகராஜாவும் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் இ.இராஜசேகரம், வலி. கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி. மாணிக்கவாசகர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(72)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் செல்லமுத்தூஸ் புடைவையகத்தின் அனுசரணையுடன் வடமராட்சிப் பிரதேச அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் வங்கிகளின் விளையாட்டுக்குழுக்களிடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டம், துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிகளில் இன்று சனிக்கிழமை மைக் கல் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

காலை 8 மணி நெல்லியடி வர்த்தக வங்கி அணி எதிர் இலங்கை வங்கி அணி.

* முற்பகல் 10 மணி - பருத்தித்துறை பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பஸ் டிப்போ அணி.

பொமோர்ஸ் விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மோதும் அணிகள் வருமாறு:-

* மாலை 3 மணி - கரவெட்டிப் பிரதேச அணி எதிர் பருத்தித்துறை நீதிமன்ற அணி.
* மாலை4 மணி - இலங்கைவங்கி அணி எதிர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அணி.
* மாலை 5 மணி - நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கி அணி எதிர் உள்ளூராட்சி திணைக்கள அணி.

# பருத்தித்துறை பஸ் நிலையம் இன்று இடம் மாறுகிறது

மந்திகை, ஒக 23

பருத்தித்துறை பஸ் நிலையம் இன்று சனிக்கிழமை தொடக்கம், சிவன்கோயிலுக்கு வடக்கே உள்ள தெரு மூடி மடப்பிரதேசத்துக்கு மாற்றப்படுகிறது.

பருத்தித்துறை நகரசபையின் செயலாளர் ந.நடராசா இத்தகவலை தெரிவித்தார்.

பருத்தித்துறை பஸ்நிலையம் இதுவரை இயங்கிய இடத்தில், புதிய சந்தை கட்டடம் அமைக்கப்பட உள்ளதால் பஸ்நிலையம் மாற்றப்படுகிறது.

(அ-218)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி இனிமேல் மாகாண சபைகளுக்கு

## ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தகவல்

கொழும்பு,ஒக.23

நாட்டின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கும் நிதியை மாகாண சபைகளுக்கு நேடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது எனவும் இம் மாதம் முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படும் எனவும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மத்திய அரசு மற்றும் பிரதேச சபை ஆகிவற்றின் அதிகாரத்திற்குட்பட்ட பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஆனால், மாகாண சபையின் கீழ் இருக்கும் பாதைகள் இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமலேயே காணப்படுகின்றன. மாகாண சபைகளுக்கு போதியளவு நிதி கிடைக்காமையே இதற்கான காரணமாகும்.

எனவே, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கும் நிதி அனைத்தையும் மாகாண சபைகளுக்கு நேரடியாக வழங்கி அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(சி)

# நூல் அறிமுகவிழா

சுன்னாகம்,ஒக.23

சுன்னாகம் பொது நூலகமும் வலி. தெற்கு பிரதேச வாசகர் வட்டமும் இணைந்து நடத்தும் சு.ஸ்ரீகுமரன் எழுதிய 'செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' நூலின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள்அதிபர் பொ.கமலநாதன் அறிமுகவுரையினையும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா வெளியீட்டுரையினையும், எழுத்தாளர் ந.சத்தியபாலன் மதிப்பீட்டுரையினையும் வழங்குவர்.

நூலின் முதற்பிரதியை சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் ந.சண்முகவேல் பெற்றுக் கொள்வார்.(1-38)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக.23

வட்டுக்கோட்டை மேற்கு, களவியோடைப்பதி பிங்கள மோதக மாமரப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த திங்கட் கிழமை18 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மூன்றாம் திகதி விநாயகர் சதுர்த்தி அன்று சிறப்புத் திருவிழாவும் அடுத்த நாள் மகேஸ்வர பூசையும் நடை பெறும்.

* * *

ஆதி மயிலிட்டி காசிப்பூதவராயப் பெருமாள் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 8 மணிக்கு சங்காபிசேஷகமும் மாலை திருவூஞ்சலும் இடம்பெறும்.

* * *

சுழிபுரம், ஒக.23

தொல்புரம் கிழக்கு மடத்துப் பிள்ளையார் ஆலய வசந்தமண்டப கும்பாபிசேகம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

(28)

* * *

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய சங்கபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

(302)

* * *

தொல்புரம் பத்தானையம்பதி ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று காலை 9 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் திருவீதியுலாவும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இராம ஊர்வலம் இடம் பெறும்.

(203)

# நாளை

| | |
|---|---|
| ஆவணி 08 | 24.08.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.இ. 04.06வரை |
| நட்சத்திரம் :கார்த்திகை | மு.ப.10.39 |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# முதியோர் கௌரவிப்பு விழா

நாவற்குழி,ஒக.23

கனடா வாழ் கைதடி உறவுகளின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் நடத்தும் முதியோர் கௌரவிப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு கைதடி வடக்கு கயற்றசிட்டி கந்தசாமி கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் 150 இற்கும் மேற்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்படுவதுடன் அவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(202-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில்.....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரைக்கீழ் நீர் சில வேளைகளில் இயற் கையாகவே மாசடைகின்றது. ஆனால் அதிகமாக தரைக்கீழ் மாசடைதல் செயற்பாடு மேற்பரப்பில் மனித நடவடிக்கை களினாலேயே ஏற்படுகின்றது. அதாவது மேற்பரப்பில் இயற்கை சமநிலை யை உணர்ந்து கொள்ளாது செயற்படும் ஒவ் வொரு மனிதனது செயற்பாடுகளினாலும் தரைக்கீழ் நீர் சிறிது சிறிதாக மாசடை கின்றது என அறியப்பட்டுள்ளது. குடியி ருப்பு பகுதிகளில் மலசலகூடக் கழிவுக ளில் நைத்திரேற்று, நைற்றரன், பக்ரீரியா, வைரஸ், செயற்கை சேதனப் பொருள் (சுத்தப்படுத்துவதற்காக பாவிக்கப்படு வது) என்பன சேர்ந்து தரைக்கீழ் நீர் மாச டைகின்றது.

கைத்தொழில் பகுதிகளில் இராசாயனம் அதிகளவில் கலப்பதனால் நீர் மாச டைகின்றது. அது மட்டுமன்றி தரைக்கீழ் குழாய்வழி எரிபொருள் விநியோகம், தரைக்கீழ் எரிபொருள் சேமிப்புக் கலன்கள் என்பவற்றில் ஏற்படும் பாதிப்பினால் அவ் வெரிபொருள்கள் கசிந்து நீர் பெருமளவில் மாசடைகின்றது. அத்துடன் திண்மக் கழி வுகள் கொட்டப்படும் இடங் களிலும் அதிகமாக நீர் மாசடைந்து வருகின்றது.

தரைக்கீழ் நீர் இது போன்ற புல கார ணங்களினால் மாசடைவதுடன் இக்கழிவுகள் மேற்பரப்பில் காணப்படுவதனால் இக் கழிவுகள் நீர் ஊடுவடியும் செயன் முறையின் போதும் அந்நீருடன் இக்கழி வுகள் உட்சென்று தரைக்கீழ் நீர் மாச டைகிறது.

எனவே இவ்வகையில் இயற்கையா கவும் மனித நடவடிக்கையினாலும் அருகும் மற்றும் மாசுபடும் தரைக்கீழ் நீர் வளத்தைப் பெருக்குதல் எம் பிரதேசத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒரு தேவையாகும். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் முற்று முழுதாக இவ்வகை பாதிப்புக்களை கட்டுப் படுத்த முடியாதெனினும் ஓரளவு இதன் தாக்கத்தினை கட்டுப் படுத்ததலாம்.

தரைக்கீழ் நீர் வளத்தினைப் பாதுகாக் கும் நடைமுறைகள்:-

* அதிகமாக மரம் வெட்டுதலைக் குறைத்தல்.
* குளங்கள் நீரேந்து பிரதேசங் க ளைப் பாதுகாத்தல்.
* கழுவு நீரோட்டத்தை (Runoff) தடுக்கும் வகையில் நீர் வடிந்தோடும் பகுதிகளில் தடைகளை அமைத்தல்.
* வெளிகளில் சீமெந்து தளங்கள் அமைப்பதை குறைத்தல் மற்றும் புல்லி னங்களை வளர்த்தல் மூலம் நீர் ஊடுவடி தலை அதிகரித்தல்.
* வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை (Waste Water) வீட்டிலேயே நிலத் தடியில் தேக்குதல்.
* அதிகரித்த நீர்ப்பாவனையைக் கட் டுப்படுத்தல்.
* நீர் விரயமாதலைத் தடுத்தல்.

இவ்வகையில் எம்பிரதேசத்தில் தரைக் கீழ் நீர்வளம் முற்றாக அற்றுப் போகும் நிலை யினை தடுக்க இன்றே நாம் ஒவ்வொரு வரும் முனைப்புடன் செயற்படவேண் டியது மிகமிக அவசியமான தாகும்.

## தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்டம் (ராப்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது "ஆ-அ-வ." கடன் இல.0006-SRI (SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைக்கான கேள்வி அறிவித்தல் இல.07

1. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்ட (TAARP) ஆகு செலவு சார்பாக பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ" ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீது திருத்த வேலைக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும் படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப் பாளருக்காக பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த காலம் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | JF/TAARP/ RD/02 தொகுதி I | வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஏழு வீதி திருத்தம்- தொகுதி I (புற்றளை ஆலய உபய கதிர்காம வீதி, தொண்டைமானாறு, கெருடாவில் வீதி, புனித சேவியர் வீதி. | 4 மாதங்கள் | M 7 (வீதிகள்) | 30,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   ii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந் தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   iii) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப் பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   iv) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   v) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021-2223625, தொலைநகல்: 021- 2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk
6. ஒப்பந்த ஆவணங்கள் ஆவணி மாதம் 25 ந் திகதி 2008 முதல் புரட்டாதி மாதம் 8 ந் திகதி 2008 வரை முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, நீகோட், கச்சேரி, யாழ்ப் பாணம்" இற்கு புரட்டாதி மாதம் 15 ந் திகதி 2008 மு.ப. 11.30 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்ட மொன்று கச்சேரியில் புரட்டாதி மாதம் 5 ந் திகதி 2008 முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

க. கணேஷ்,
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்.
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி.55442262)

## உபகுழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ்.மாவட்ட கலை இலக்கிய விழா தொடர்பான உபகுழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு விழா இணைப்பாளர்கள், செயலாளர்கள், கலைஞர் விவரத் திரட்டிற்கான உறுப்பினர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆசீர்வாதம் திரேசம்மா



இளவாலையைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் திரேசம்மா நேற்று (22.08.2008) வெள்ளிக்கிழமை இறைபாதம் அடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர் என்று அன்பாக அழைக் கப்படும் மரியான் ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும் மத்தீ னம்மா (அலீன்), அன்ரன் (இத்தாலி), யசிந்தா, துரை ஆகியோ ரின் அன்புத் தாயும் யேசுதாசன், தவம், கனகசிங்கம் ஆகியோ ரின் அன்பு மாமியும் ஜலீனா, ஜமீலா, ஜெறாட், ஜனிலா, ஜமினி, மிதிலா, நிஜா, மதன், மீரா, கபில், சூசைநாதன், கணேசராயா, சுதர்சனன், சுஜா, றமணன், விஜய், றொஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2008) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.70, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (77392)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கயிலாயபிள்ளை காசிப்பிள்ளை



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கயிலாய பிள்ளை காசிப்பிள்ளை 18.08.2008 திங் கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா கயிலாயபிள்ளையின் பாசமிகு மனைவியும் நாகேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற ராஜேஸ் வரி மற்றும் விஜியரத்தினம் (ஜேர்மனி), யோகேஸ்வரி (ஜேர்மனி), புவனேஸ்வரி (அமெரிக்கா), விஜியகுமாரி (ஜேர் மனி) ஆகியோரின் அன்புத் தாயும் குணபாலசிங்கம், அருணகி ரிநாதன் (ஜேர்மனி), அருளானந்தம் (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும் சுரேகா, அம்புலி, அல்லி, ஆழலாடி, செந்தூரன், மைதிலி, துஸ்யந்தி, கலிவர்மன், விஜிதா, டானியல், டெபோறா சால மோன், றூத், கிரியேன், சதன்யூ, சுவன்யா, சாருன்யா ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் வினோசா, அச்சுதன் (ஜெய்சன்) ஆகி யோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2008) சனிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை. (77390)

தகவல்:
க.கயிலாயபிள்ளை (கணவர்),
க.நாகேஸ்வரி (மகள்),
க.விஜியரத்தினம் (மகன்).

### பொன்னுத்துரை இராசேந்திரம்



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிட மாகக் கொண்டவரும் 110/1, சிவன்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசேந் திரம் (22.08.2008) வெள் ளிக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான பொன்னுத்துரை- இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ் சென்றவர்களான தில்லை யம்பலம்- இராசரத்தினம் தம்பதியரின் மருமகனும் தங்கலெட்சுமியின் அன்புக் கண வரும் மகாதேவர், மகேஸ்வரி, பரமேஸ்வரி, ரெட்ணசபாபதி, சுப்பிரமணியம், சந்திரசேகரம், காலஞ்சென்ற வேலாயுதம் பிள்ளை மற்றும் மகேஸ்வரன், இந்திராணி (கனடா) ஆகியோ ரின் சகோதரரும் சுரேஷ்குமார், சுபாசினி, ஜெயக்குமார், பால குமார் (மகராசி நகைமாடம்), லதாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரி, தசக்கிரிபன் (நக்கீரன்- வேலணை), கலைரஜனி, சதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் தன லெட்சுமி, காலஞ்சென்றவர்களான உலகநாதன், ஏகாம்பரம் மற் றும் பத்மநாதன், உமாதேவி ஆகியோரின் மைத்துனரும் நிகேதன், கேனுஜன், கபிநயா, நிலக்சன், கம்ஷிகா, தனுஸ்குமார், மதுஸ் குமார், மதுரா, அம்சவி, ஆருஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2008) சனிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்குத் தகனக்கிரி யைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

110/1, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (77394)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணமட்ட 17 வயதுப்பிரிவு உதைபந்தாட்டம் மானிப்பாய் இந்து வென்று சம்பியனாகத் தெரிவு



(உதயனின் ஆவணப் படம்)

வவுனியா, ஒக.23

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் உதை பந்தாட்டத்தில் 17 வய துப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனானது.

வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி யாட்டத்தில் மானிப் பாய் இந்துக் கல்லூரியும் மன்னார் சென் சேவியர் கல்லூ ரியும் மோதிக்கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் இந்து 2:0 என்ற கோல் கணக்கில் மன் னார் சென் சேவியர் கல்லூரியைத் தோற்கடித்து மாகாணச் சம்பியனாகத் தெரிவானது.

19 வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மன்னார் சென்.சேவியர் கல்லூரியும் மோதின.

இதில் மன்னார் சென். சேவியர் வெற்றி பெற்று சம்பியனானது. அருணோதயா இரண்டாம் இடத்தைப் பெற்றது. (202)

சிறார்களிற்கான விசேட கணினி பயிற்சிகள்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணினி பயிற்சி நெறி.
JUNIOR DIPLOMA IN
Computer Science
Graphics & Animation
Computer Programming
Video Editing
Duration : 3 months
மேலதிக விபரங்களுக்கு
ASIAN-CSC COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், Tel 222 5677

## பகிரங்க ஏலவிற்பனையைப் பிற்போடல்

யாழ்.கங்கத்திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள ஒரு கண்ணாடி இழை வள்ளம் மற்றும் "செய்யது" பீடி அடங்கிய முப்பது பொதிகள் என்பவற்றை விற்பனை செய்வதற்காக 25.08.2008 ஆம் திகதி யாழ்.செயலக வளாகத்தில் நடைபெறவிருந்த பகிரங்க ஏலவிற்பனை பிற்போடப்பட்டுள்ளது. இவ் ஏலவிற்பனை பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கே.கணேஷ்
அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம். (ரி-554279)

# வவுனியாவில் நடந்த வலைப்பந்தாட்டத்தில் மூன்று பிரிவுகளையும் யாழ்.அணிகள் சுவீகரித்தன

## இரண்டு பிரிவுகளில் இரண்டாம் இடத்தையும் தட்டிக்கொண்டன

வவுனியா, ஒக 23

வவுனியாவில் நடைபெற்று வரும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி களில் நேற்று இடம் பெற்ற வலைப்பந் தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணிகள் மூன்று பிரிவுகளிலும் மாகாணச் சம்பியனாகின.

இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து அணிகள் பங்கு பற்றின.

இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள் வருமாறு:-

* வயது 15- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ரம்பைக்குளம் பெண்கள் பாடசாலை.
* 17வயதுப் பிரிவு- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி.
* 19வயதுப் பிரிவு- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. (01)

## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு 24.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல் லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம்.

இதனால் மின்பாவனையார்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
22.08.2008

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

## சுகாதாரப் பகுதியின் கண்காணிப்புக்குழுக் கூட்டம்

யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண சுகாதார அமைச் சின் செயலாளர், யாழ். அரச அதிபர் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.இக் கூட்டத்திற்கு யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளைக் கலந்துகொள்ளுமாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (1-202)

## பல்கலை. உடற்கல்விப் பிரிவு மாணவர் மறியல்; புதிய மாணவர்களுக்கான தேர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக 23

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவின் சிரேஷ்ட மாணவர்கள் நேற்று மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அதேவேளை புதிய மாணவர்களைத் தெரிவுசெய்யும் செய்முறைத் தேர்வு கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உடற்கல்விப் பிரிவின் மூலம் இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் மேலும் ஒருவருடம் கற்கை நெறியைத் தொடர்ந்தால் உயர் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்தக்கற்கை நெறிக்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்காததால், வேலை வாய்ப்பு பெறுவதில் சிக்கல் ஏற்படுவதாகத் தெரிவித்து மாணவர்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

தமது கற்கை நெறியை அங்கீ கரிக்குமாறு கோரியே நேற்று மறியல் போராட்டத்தை நடத்தினர்.

போராட்டம் காரணமாக, நேற்று இடம் பெற விருந்த புதிய மாணவாகளுக்கான செயன் முறைப் பரீட்சை கள் பாதிக்கப் பட்டன.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து செயன் முறைப்பரீட் சைக்கு வந்தவர்கள் சிரேஷ்ட [illegible] போராட்டம் காரணமாக திரும்பிச் சென்றனர்.

## 60 ஆவது திருமண வாழ்த்து



திரு.திருமதி முத்துக்குமாரசாமி மனோன்மணிஅம்மா

தம்பதியினர் தமது 60 ஆவது திருமணநாளை இன்று(23.08.2008) சனிக்கிழமை கொண்டாடுகின்றார்கள்.

அவர்களை பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

ஆவரங்கால், புத்தூர்.

வாழ்த்துவோர் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



கடந்த 24.07.2008 வியாழக்கிழமை லண்டன் மாநகரில் சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

### சந்திரசேகரி முருகதாஸ்

(கடவுள் தாஸ்)
(Electronic Engineer)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (23.08.2008) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் இடம்பெறும். இப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!ஓம் சாந்தி!!!

'ஸ்கந்தபதி'
இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வீரசிங்கம் தெய்வநாயகி

'கௌரி கோட்டம்' அல்வாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் தெய்வநாயகி நேற்று (22.08.2008) வெள் ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தா.வீரசிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) துணைவியும் செல்வநாதன்(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), அமரர் விஸ்வநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), இரங்கநாதன் (உப அதிபர், வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), திவ்வியநாதன் (அபிவிருத்தி உதவியாளர், பிரதேச செயலகம், கரவெட்டி), கௌரி, துளசி(ஆசிரியை, வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை), கஸ்தூரி(நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், நீதிமன்றம், கல்கிசை) ஆகியோரின் தாயும் கருணைவேல் (லண்டன்), வாசுதேவன், சுரேஸ்பாலன்(கணக்காளர், கட்டார்), மேசி இசபெல், கனகாம்பிகை, சுஜீவா(ஆசிரியை,வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), தேனுகா(ஆசிரியை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமியும் மா.செல்லத்தம்பி (மின்சாரசபை), அமரர் மா.சின்னராசா ஆகியோரின் சகோதரியும் தா.பேரின்பநாயகம்(பொறியியலாளர், இலங்கைவங்கி), சிவபாக்கியம், தவநாயகி, கமலா, காலஞ்சென்றவர்களான சிந்தாமணி, தங்கம்மா, அம்பிகாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.08.2008) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கௌரிகோட்டம்,'
அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

BIT
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
Semester 1
விரிவுரைகள் ஆரம்பம்
30.08.2008
(பகல் 10.00)
தெரிவுப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவுப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான விரிவுரைகள் 30.08.2008 அன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. எனவே மாணவர்கள் அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்
தெரிவுப் பரீட்சை பெறுபேறுகளை மாணவர்கள் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
BIT கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS City Campus உடன் இணைந்து கணனிப் பட்டதாரியாகும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fax : 021 222 6933

MANOJ EXPRESS
யாழ். - கொழும்பு
விசேட விமானசேவை
26.08.2008, 28.08.2008
ஒரு வழிப் பயணச் சீட்டு
8000/=
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
உள்நாட்டு, வெளிநாட்டு பார்சல் சேவை துரித கதியில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: Ram Com
No.06, New Market, Hospital Road,
Jaffna. T.P : 021 222 8428.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் சவப்பெட்டிக்கு இறுதி ஆணி அடிக்கும் நாள் நெருங்குகின்றதாம்!

## நாடாளுமன்றில் அமைச்சர் நிமால்

கொழும்பு, ஓக. 23

புலிகளின் தலைவர் பிரபாகரனின் சவப்பெட்டியில் இறுதி ஆணி அடிக்கும் காலம் நெருங்கிவிட்டது என்றும் வெகு விரைவில் படையினர் அதைச் செய்வர் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சபை ஒத்தி வைப்புவேளை, பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு தேர்தல் வன்முறையில் ஈடுபடுகின்றது என்பது பொய்யான குற்றச்சாட்டாகும். எதிர்க்கட்சிகள் எதிர்கொள்ளப்போகும் தோல்வியை மறைப்பதற்கான காரணத்தைத் தேடும் முயற்சியாகவே இந்தக் குற்றச்சாட்டு அமைந்துள்ளது.

தேர்தல் வன்முறைகளைத் தடுப்பதற்கும், தேர்தல் தினத்தன்று பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்தேர்தலில் மக்கள் அரசுக்கேதான் வாக்களிக்கத் தீர்மானித்துள்ளனர். அவர்கள் தேசிய பாதுகாப்புக்கே முதலிடம் கொடுக்கின்றனர்.

அதனால் தான் தேசிய பாதுகாப்புக்காக புலிகளுடன் சண்டையிடும் இந்த அரசை மக்கள் ஆதரிக்கின்றனர்.புலிகள் முற்றாக அழிந்துவிடும் நேரம் நெருங்கிவிட்டது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் சவப்பெட்டிக்கு இறுதி ஆணி அடிக்கும் நடவடிக்கையில் எமது படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்போது புலிகள் மறைந்து கொள்ள இடமில்லாது ஓடுகின்றனர். படையினர் புலிகளை ஓட ஓட விரட்டுகின்றனர். விரைவில் வடக்கு கைப்பற்றப்படும் - என்றார்.

## படையினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கால கட்டத்தில் எல்லாம் போராட்டத்திற்கு மக்கள் பலமாக கவசமாக இருந்ததால்தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகத்தில் பேசப்படும் தேசிய போராட்டமாக மாறியுள்ளது.

அறவழிப் போராட்டமாக இருந்தாலும் ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமையாக தமிழீழம்தான் தீர்வு என்று உலகிற்கு சொன்னவர்கள் எமது மக்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த போது விடுதலைப் புலிகள் பலவீனமாகி விட்டார்கள் என நினைத்தனர். அடுத்த கட்டமாக முல்லைத்தீவை வெற்றி கொண்டு மக்கள் விடுதலைப் புலிகளுக்கு துணையாக நிற்கின்றனர் என்று நாம் உலகிற்கு ஒரு செய்தியைச் சொன்னோம் . ஓயாத அலைகள் ஒன்றின் மூலமும் மக்கள் போராளிகளோடு போராளிகளாக அணி திரண்டனர்.

ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்கு எதிராகவும் மக்கள் மக்கள் படையாக தென்மராட்சிக்குள்ளும் ஒட்டுசுட்டான், கிளிநொச்சி, மாங்குளம் பிரதேசத்திலும் சிங்களப் படைக்கு எதிராக நின்று பல வரலாற்று சாதனைகளைப் படைத்தவர்கள் மக்கள் படையினர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மென்மேலும் வளர்த்தெடுப்பதில் பக்கத் துணையாக இருந்து செயற்பட்டவர்கள் எமது மக்கள் படையினர்தான்.

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மக்களின் ஆதரவு இருக்கும் வரை அவர்களைத் தோற்கடிக்க முடியாது என்று குறிப்பிட்டதுபோல் இது நல்ல எடுகோளாக அமையும்.

மக்களும் புலிகளும் ஒன்றுதான் என்று உலகத்தில் உள்ள இராஜந்திரிகள் அனைவருக்கும் நன்கு தெரியும். தமிழ் மக்கள் அனைவரும் எல்லாப் பலத்தினையும் ஒருங்கிணைத்து எதிரிக்கு ஒரே சத்தியாக தக்க பதிலடி கொடுக்கமுடியும் என்பதை காட்டி நிற்கின்றது.

வீரத்திற்கு இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள். மக்கள் அனைவருக்கும் ஆயுதம் புதிதல்ல. எதிரியின் எறிகணைகள் புதிதல்ல. வானூர்திகள் புதிதல்ல. மக்கள் ஆயுதங்கள் எல்லாம் கற்றவர்கள். தற்போது மக்கள் படையாக எழுந்து பலவீனமாகக் அகலக் கால் பதிக்கும் சிறிலங்காப் படைக்கு வன்னியில் புதைகுழி அமைத்து வல்வளைப்பில் உள்ள மக்களை மீட்கவேண்டும் - என்றார். (அ)

Microsoft Certified
Systems Engineer / Administrator
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.08.2008 08.00PM
Become an Engineer
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் இரண்டுபொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகேசு இராவணேஸ்வரன் (வயது - 32) என்றும் காயமடைந்தவர்கள் சி.பெருமாள் (வயது - 64) மற்றும் நான்கு பிள்ளைகளின் தாயான சி. ரமணி (வயது- 32) ஆகியோர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பொதுமக்களின் 3 வீடுகள் சேத மடைந்துள்ளதுடன் வான் ஒன்றும் கடும் சேதத்திற் குள்ளாகியுள்ளது.

இதேவேளை, அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் விநியோகத்தளம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் சீரழிந்து போயுள்ள பிரதேசங்களை மீளப் புனரமைப் புச் செய்து மக்க ளின் அன்றாட அவலங்களைத் துடைத்து அவர்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற் படுத்தவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவை அங்கீகாரத்துடன் வடக்கு மக்களுக்கான சிறப்பு செயற்பாட்டுக் குழு ஒன்றை நியமித்து அதற்கு என்னைத் தலைவராக நியமித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் சார்பாக அரசில் அங்கம் வகிக்கும் ஓர் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற வகையில் தற்போது இடம்பெறும் அவலங்களில் இருந்து எமது மக்களை மீட்டெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எனக்குண்டு.

வன்னி பெருநிலப்பரப்பில் உள்ள பொதுமக்கள் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும்போது, அம்மக்களுக்குத் தேவையான சகல வாழ்வாதார உதவிகளையும் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி போதுமான உதவிகளை வழங்கி உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

இதற்கு பதிலளித்த ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி மேற்கண்ட விடயங்கள் தொடர்பாக தமது அவதானங்களையும் செலுத்துவார் என உறுதி அளித்தார்.

SPOKEN ENGLISH DAY BY DAY
12 வாரகால பயிற்சி நெறி
VCD/ DVD/ CD- ROMS TICK- SOFT- விற்பனையில்
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோர், வெளிநாடு பயணம் செல்வோர் ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் உகந்தது.
பின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்.
பூபாலசிங்கம்- யாழ். | அன்னை - யாழ். | ஆல் சிலோன் - யாழ்.

# கொழும்பு தேவாலயத்தில் வெடிபொருள்கள் மீட்பு

தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் அங்கி உட்படப் பெருமளவு இராணுவ உபகரணங்களைப் பொலிஸார் நேற்றுக் கொழும்பு புறக்கோட்டையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றினுள்ளிருந்து மீட்டுள்ளனர்.

பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலின் பேரில் ஒல்கோட் மாவத்தை புனித பிலிப் நேரியார் கிறிஸ்தவ தேவாலயத்திற்குள்ளிருந்து காலை 8.50 ம ணியளவில் இந்த வெடிகருவிகள் மீட்கப்பட்டிருக்கின்றன.

வெடிக்க வைக்கும் கருவிகள் 19 உட்படத் தற்கொலை அங்கிக்கு அவசியமான பல பொருள்கள் பொதியொன்றினுள் சுற்றி மறைத்து வைக்கப்பட்டிருந்தன எனவும் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கண்டியில் பலகொல்ல முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகில் மணல் குவியலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருள்கள் சிலவற்றையும் மற்றும் அதற்கான உபகரணங்களையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கண்டிப் பொலிஸாருக்குக் கிடைத்த அவசர தகவலொன்றை அடுத்தே பலகொல்ல பொலிஸார் இவற்றை மீட்டனர். மணல் எடுத்துச் செல்லப்படும் லொறி ஒன்றின் ஊடாக இவை கொண்டுவரப்பட்டு மணல் குவியலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இரு டெட்டனேற்றர்கள், 138 சிறிய இரும்புக் குண்டுகள் (போள்ஸ்) உட்பட ஒரு கிலோ கிராம் நிறையுடைய பொருட்களைப் பொலிஸார் மீட்டனர். இச்சம்பவம் தொடர் பாக மணல் குவியல் இருந்த வீட்டின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை வழங்கிவருவதாக ஐ.நா.வின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

வன்னியில் இடம்பெறும் மோதல்களால் உருவாகியுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலையால் அங்கு ஐ.நா. முகவர் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த பல மனிதாபிமான செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்றும் ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் மொத்தமாக 69 மனிதாபிமான செயற்றிட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இந்த மோதல்களால் ஒரு லட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமானமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் ஐ.நா. விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## துணுக்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணுக்காய் பகுதியை நோக்கி வியாழக்கிழமை வடக்கு மற்றும் மேற்குத் திசைகள் ஊடாக இராணுவத்தின் 57 ஆவது படைப் பிரிவு முன்னேறத் தொடங்கியதாகவும், கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இதனைக் கைப்பற்றியதாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வேளாங்குளம் மற்றும் மாங்குளத்திற்கு நடுவில் அமைந் துள்ள துணுக்காய் கடந்த 25 வருடங்களாக விடுதலைப் புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக விளங்கி வந்ததாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. துணுக்காயிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள உயிலங்குளம், முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பகுதியெனவும், இப்பகுதியில் கடந்த சில நாள்களில் கடும் மோதல் இடம்பெற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவத்தினர் மூன்று தசாப்தகாலத்தில் முதல் தடவையாக இப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ள பாதுகாப்பு அமைச்சு துணுக்காயைக் கைப்பற்றியுள்ளதன் மூலம் விடுதலைப் புலிகளின் மற்றுமொரு முக்கிய நகரான மல்லாவியைக் கைப்பற்றும் நிலையில் இராணுவத்தினர் உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள பாவித்த ஓடு, முகட்டு ஓடு, பனை மரம், நிலை, கதவு, யன்னல் நிலை கதவு, 4X3 - பாலை தீராந்தி, 2X1 - பாலை றீப்பைத்தடி போன்ற பொருள்கள் விற்பனைக் குண்டு. வாங்க விரும்புவோர் மானிப் பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும்.
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்.

## ஈரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார். இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையில் பொறியியல் நிர்மாணப்பணிகளில் 100 கோடி டொலரை ஈரான் முதலிடவுள்ளது.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் என்றும் அதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த புதன் கிழமை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தகவல் வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

உள்ளூராட்சி தேர்தல்கள் குடாநாட்டில் நடத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாம் அறிக்கைகளைக் கோரியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே முதலில் தேர்தலை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட இருப்பதாகவும் அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் 'உதயனுக்'குத் தெரிவித்தன.

இரண்டாம் கட்டமாக -

யாழ். மாநகரசபையை அடுத்து குடாநாட்டில் உள்ள பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய மூன்று நகர சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும்-

தொடர்ந்து 12 பிரதேசசபைகளுக்குரிய தேர்தல்கள் நடைபெறும் என்றும் - அதே வட்டாரங்கள் மேலும் தகவல் தெரிவித்தன.

மாநகர மற்றும் நகர சபைகளுக்கும், பிரதேச சபைகளுக்குமான தேர்தலுக்கு 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நியமனப்பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன. பின்னர் நாட்டு நிலைமை காரணமாக ஆறு மாதங்களுக்கு தேர்தல் பிற்போடப்பட்டு டிசெம்பரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மீண்டும் 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை உள்ளூராட்சி தேர்தல்கள் பிற்போடப்பட்டன. அதன் பின்னர் நியமனப்பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டிருந்தன.

நீண்ட இடைவெளியின் பின்னர் நாடாளுமன்றத்தில் தேர்தல் சட்ட திருத்த மூலம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதன் பிரகாரம் புதிய வேட்பு மனுக்கள் கோரி தேர்தல் நடத்தப்படும் என அரசாங்கம் அப்போது அறிவித்திருந்தது.

ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. ஏற்கனவே நியமனப் பத்திரம் சமர்பித் தவர்களில் பலர் உயிரிழந்து விட்டதாலும், பலருக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாலும் தேர்தல் காலவரையின்றி ஒத்திப்போடப்படுவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

ACA கோவில் வாசல் கே.கே.எஸ். வீதி, இணுவில்
பௌதிகவியல் A/L 2009, 2010
சடப் பொருளியல்
Wed:- 4.00p.m
திரு:- குமரன்
ஆரம்பம்:- 27.08.2008 (Wed)

விற்பனையாகிறது
O/L • மாதிரி வினாத்தாள்கள்
விடைகளுடன்
கொழும்பு பௌத்த இலக்கு விளாவிடை வெற்றிப்பாதை
மொழி பெயர்ப்பு வினாத்தாள்
55- வினாப்பத்திரங்கள்
2008- பரீட்சைக்கு தோற்றவுள்ள O/L மாணவர்கள் சுயமாக தம்மை தயார்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டது.
அன்னை புத்தகசாலை
இல7,ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்- 222 9881

மிகவிரைவில் வெளிவருகிறது
O/L - வரலாறு
ஆக்கம்- R.S.சந்திரன்
தற்பொழுது விற்பனையாகிறது
ஆண்டு- 16 வரலாறு
ஆக்கம்- R.S.சந்திரன்
அன்னை புத்தகசாலை,
இல7,ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்- 222 9881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.